விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 10 புதன்கிழமை (22.02.2006) தொலைபேசி 222 3378 ஒலி 65

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## மகிந்தவின் சிந்தனையில் நிரந்தர சமாதானமே இலக்கு

### அரச தரப்பு பிரதிநிதிகள் தெரிவிப்பு

(ஜெனீவா)

இலங்கையின் இறைமையை பாதுகாக்கும் வகையிலான அர்த்தமுள்ள போர்நிறுத்தத்தை அமுல்படுத்த அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தும் எனஅரச குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அரசதரப்பு பிரதிநிதிகள் குழுவினர் ஜெனீவாவில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர். இவ் சந்திப்பில் அரச குழுவின் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா உரையாற்றுகையில் ;

மகிந்த சிந்தனைக்கு அமைவாக நிரந்தர சமாதானத்தை அடைவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும்.

ஜெனீவாப் பேச்சுக்கள் அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையே நம்பிக்கையை வளர்க்க வழிசமைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். சந்திப்பில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கருத்துத்தெரிவிக்கையில் எதிர் காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக வடக்குக் கிழக்கில் அமைதியான சூழலை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் (12 ஆம் பக்கம் பார்க்க)


## ஜெனீவாவில் இன்று பேச்சு

(ஜெனீவா)

யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல் படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இன்று சுவிஸ்லாந்து நாட்டின் தலைநகர் ஜெனீவாவில் இடம் பெறுகின்றது.

பேச்சுவார்த்தைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக சுவிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றது.

ஜெனீவா நகரில் இருந்து 22 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஷடோதா போஷே என்ற பழங்கால அரண்மனை விருந்தினர் மாளிகையில் சுவிஸ் நேரப்படி இன்று காலை 8 மணிக்கு பேச்சுவார்த்தை ஆரம்பமாகவுள்ளது.



இதற்கு முன்னதாக இன்று காலை 7மணிக்கு ஊடகவியலாளர்கள் அனைவரும் பேச்சுவார்த்தை நடைபெறுகின்ற இடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு ஆரம்ப விடயங்கள் குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

இதில் சுவிஸின் அரச பிரதிநிதி மற்றும் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர் அறிமுக உரையினை ஆற்றுவர்.


இதனையடுத்து பேச்சுவார்த்தைகள் முடிவுற்ற பின்பே ஊடகவியலாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# எங்களிடம் பிரபா சிந்தனை
# அவர்களிடம் மகிந்த சிந்தனை

## எடுபடப்போவது எது எனப் பார்த்துவிடுவோம்

## சுவிஸில் ஆற்றிய உரையில் பாலா

(ஜெனீவா)



**ஜெனீவாவில் மகிந்த சிந்தனை அடிப்படையில் பயிற்சி பெற்று வரும் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் பிரபாகரன் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட எங்களுக்கும் பேச்சுக்கள் நடைபெறவுள்ளது என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

லண்டனில் இருந்து சுவிஸ்லாந்திற்குச் சென்றடைந்த அன்ரன் பாலசிங்கம் தம்பதியினருக்கு சுவிஸ் விமான நிலையத்தில் ஈழத்தமிழர்

இவ் வரவேற்பு நிகழ்வின்போது விமான நிலையத்தில் கேட்போர் கூடத்தில் ஈழத்தமிழர்கள் மத்தியில் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றி

தம் நடைபெற்று வந்தது. இப்போது இது முடிந்து கருத்துயுத்தம் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகாண்பதற்குத்தான் இந்தப்பேச்சுக்கள் நடத் தப்படவுள்ளன. ஆனால்

## நோர்வேத் தரப்புடன் அரச குழு சந்திப்பு

(ஜெனீவா)

ஜெனீவா சென்றுள்ள அரசாங்கக் குழுவினர் நோர்வேத் தரப்பினரை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

நோர்வே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான் பிரட்ஸ்கர் ஆகியோர் அடங்கிய குழுவினரும் அரச பேச்சுவார்த்தைக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினரும் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பிலான

வா உரையாற்றுகையில் ;

மகிந்த சிந்தனைக்கு அமை

சூழலை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் (12 ஆம் பக்கம் பார்க்க)

ஷடோதா போஷே என்ற பழங்கால அரண்மனை விருந்தினர் மாளி

ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு முன்னதாக இன்று

தைகள் முடிவுற்ற பின்பே ஊடக வியலாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# எங்களிடம் பிரபா சிந்தனை


# அவர்களிடம் மகிந்த சிந்தனை

## எடுபடப்போவது எது எனப் பார்த்துவிடுவோம்

## சுவிஸில் ஆற்றிய உரையில் பாலா

(ஜெனீவா)

**ஜெனீவாவில் மகிந்த சிந்தனை அடிப்படையில் பயிற்சி பெற்று வரும் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் பிரபாகரன் சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட எங்களுக்கும் பேச்சுக்கள் நடைபெறவுள்ளது என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**



லண்டனில் இருந்து சுவிஸ் லாந்திற்குச் சென்றடைந்த அன்ரன் பாலசிங்கம் தம்பதியினருக்கு சுவிஸ் விமான நிலையத்தில் ஈழத்தமிழர் களால் அமோக வரவேற்பு வழங் கப்பட்டது.

இவ் வரவேற்பு நிகழ்வின்போது விமான நிலையத்தில் கேட்போர் கூடத்தில் ஈழத்தமிழர்கள் மத்தியில் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றி னார். அவர் ஆற்றிய உரையில் தமிழீ ழத்தில் சமீபகாலமாக நிழல் யுத் தம் நடைபெற்று வந்தது. இப்போது இது முடிந்து கருத்து யுத்தம் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகாண் பதற்குத்தான் இந்தப்பேச்சுக்கள் நடத் தப்படவுள்ளன. ஆனால் அவர்களோ விடுதலைப்புலிகளை மடக்கவேண்டும், பாலசிங்கத்தை மடக்கவேண்டு மென்று பயிற்சிகள் எடுத்துக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தரப்புடன் அரச குழு சந்திப்பு

(ஜெனீவா)

ஜெனீவா சென்றுள்ள அரசாங்கக் குழு வினர் நோர்வேத் தரப்பினரை நேற்று சந்தித் துக் கலந்துரையாடினர்.

நோர்வே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், இலங்கைக் கான நோர்வேத்தூதுவர் ஹான் பிரட்ஸ்கர் ஆகியோர் அடங்கிய குழுவினரும் அரச பேச்சுவார்த்தைக்குழுவின் தலைவர் அமைச் சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையி லான குழுவினரும் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாடு இச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டதாகக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவராக சுவிடன் நாட்டவர் நியமனம்

### நோர்வே அரசு அறிவிப்பு

(நோர்வே)

இலங்கையின் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவராக சுவீடனைச் சேர்ந்த பிரிகேடியர் உள் ஹென்ரிக்சன் நியமிக்கப்பட்டுள்ள தாக நோர்வே அரசாங்கம் அறி வித்துள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்ட இரு தரப்பினரின் ஆலோ சனையின் பின்னர் இவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டுள்ள இலங்கை அரசாங் கம் மற்றும் விடுதலைப்புலிகளுட னான ஆலோசனைகளை அடுத்து கண்காணிப்புக்குழுவினரின் தலை மைப்பொறுப்பாளரை பரிந்துரைக் குமாறு நோர்டிக் நாடுகளுக்கு நோர்வே அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

இதனையடுத்து சுவீடனைச் சேர்ந்த பிரிகேடியர் ஹென்ரிக்சன் தெரிவு செய்யப்பட்டு எதிர்வரும் ஏப்பிரல் முதலாம் திகதி முதல் பொறுப்புக்களை ஏற்கவுள்ளார்.

இதேவேளை நோர்வே நாட்டின் ஹக்ரூப் ஹொக்லண்ட் கண்கா ணிப்புக்குழுவின் தலைவராக இருந்து வருகிறார். இதேவேளை போர்நிறுத் தக்கண்காணிப்பாளரும் சமாதான முயற்சிகளுக்கான மத்தியஸ்தர்க ளும் ஒரே நாட்டவர்களாக இருக்கக் கூடாது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் பதுளை யில் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ந-4)

## பேச்சுக்கள் வெற்றிபெற சர்வமதப் பிரார்த்தனை

### யாழ்.மாவட்டத்தில் நேற்று நடந்தது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறவேண்டி யாழ்.மாவட்டத்தில் நேற்று சர்வமதப் பிரார்த்தனை இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆலயங் களிலும் ; பாடசாலைகளிலும் நேற்று நண்பகல் 12 மணிக்கு சமாதானத் தை வேண்டி மணியொலிக்கப்பட்டதுடன் பாடசாலை மாணவர்கள் மூன்று நிமிட நேரம் எழுந்து நின்று பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை சர்வமதப் பிரார்த்தனையின் பிரதான நிகழ்வு யாழ். மாவட்ட மனிதநேய ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ்.வணிகர்கழக மண்டபத் தில் இடம் பெற்றது. ஆரம்ப நிகழ்வாக மும்மதத் தலைவர்கள் சமாதானத் தீபத்தினை ஏற்றிவைத்தினர். (12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:

021 - 222 3891, 222 6297, 077 - 2349999,

011 - 2372952/3, 011 - 2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.



எக்ஸ்போ ஏயார்



வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# வெளிநாடு செல்வதற்கு இலகு கடன் திட்டம்

(கொழும்பு)

தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சி பெறும் மாணவர்கள் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுச்செல்வதற்கு உதவியாக இலகு கடன் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக தொழிற்பயிற்சி அமைச்சர் பிய சேனகமகே தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வெளிநாடுகளில் பெரும் மதிப்பு உள்ளது. எமது நாட்டில் அதிகளவு தொழில் நுட்ப திறமை கொண்ட மாணவர்கள் இருக்கின்றனர்.

இருப்பினும் பொருளாதார நெருக்கடி காரணமாக எல்லோராலும் வேலைதேடி வெளிநாடுகளுக்கு செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இம் மாணவர்களுக்கு உதவும் வகையிலேயே இலகு கடன் திட்டமொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளோம். நாடளாவிய ரீதியில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சி பெற்று சான்றிதழ்களுடன் வெளியேறும் மாணவர்களுக்கு மாத்திரமே இக் கடனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எமது நாட்டில் உள்ள கல்லூரிகளில் பயிற்சிபெற்று வெளிநாடு செல்லும் மாணவர்கள் வெளியிடங்களில் அதிக வட்டிக்கு கடன் வாங்குவதுடன் பல தனியார் முகவர் நிலையங்களால் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

இவற்றைத் தவிர்க்கும் முகமாக அரச வங்கிகளில் இலகு கடன் அடிப்படையில் பணத்தைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவதற்குத் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சரவைக்கு கூடிய விரைவில் பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## இடமாற்றம்

கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலகம் வெகு விரைவில் நவின்டில் நாவலர் மடத்திற்கு மாற்றப்படவுள்ளது. தற்போது கோட்டக்கல்வி அலுவலகம் திரு இருதயக்கல்லூரி வளாகத்தில் ஓர் அறையில் இயங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-109)

## புத்தகங்கள் அன்பளிப்பு

லண்டனிலுள்ள புக்ஸ் அவ்நோட் (Books Abroad) எனும் நிறுவனம் யாழ்ப்பாணத்திலுள்ள மாநகர சபையின் பொது நூலகம், அறவழிப் பொது நூலகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகம் ஆகியவற்றுக்கு பெரும் தொகையான புத்தகங்களை அன்பளிப்பாக அனுப்பிவைத் துள்ளது.

இப் புத்தகத் தொகுதியில் சிறுவருக்கும் வளர்ந்தவர்களுக்குமான புத்தகங்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-16)

## வேட்பாளர்களுக்கான இலக்கங்களை இன்று வழங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கான இலக்கங்களை வெளியிடும் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகுமென தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த இலக்கங்களை வெளியிடும்பணிகளை நேற்று முன்தினம் ஆரம்பிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டிருந்ததாக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் வேட்புமனுக்களை பரிசீலனை செய்து பட்டியலிட வேண்டியுள்ளதன் காரணமாகவே வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் வெளியிடப்படுவது தாமதமாகின்றது.

வேட்பு மனுக்கள் பரிசிலிக்கப்பட்டு தேர்தல் ஆணையாளர்களினால் அவை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் வர்த்தமாணி மூலம் பிரசுரிக்கப்படவுள்ளன. (த-9)

## கதிர்காமரின் கொலை விசாரணை

### சட்டமா அதிபரின் ஆலோசனை பெறத் தீர்மானம்

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை சம்பந்தமான விசாரணைகளுக்கு சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக இந்த கொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த அறிக்கை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தக்கொலை சம்பந்தமாக 6 பேர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். சட்ட மா அதிபரின் ஆலோசணை கிடைக்கப் பெற்ற பின்னர் இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)







யாழ். பொது நூலகத்தின் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள ஜேர்மன் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வழங்கப்பட்ட நூல்களைப் பொதுமக்கள் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- திலீவின்பன்)

## இராசி பலன்

**22.02.2006**
**(மாசி 10, புதன் கிழமை)**
**நவமி முன்னிரவு 6.56மணிவரை**
**கேட்டை முன்னிரவு 10.44மணிவரை**
**இராகுகாலம் 12.31-2.01மணிவரை**
**சுபநேரம் 5.01-6.31 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | அமைதிக்குறைவு, வாகனபயம், காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு. |
| இடபம் | கலந்துரையாடல், எடுத்த காரியம்கைகூடும், போசன சுகம், நண்பர்கள் உதவி. |
| மிதுனம் | சுகவாழ்வு, திடீர் பயணம், காரிய அனுகூலம், தேகநலன். |
| கடகம் | காரிய இடையூறு, சொத்துப்பிணக்கு, ஆரோக்கியக்குறைவு, வேலைச்சுமை. |
| சிங்கம் | அற்பர் உறவு, கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், சுபசெலவு. |
| கன்னி | அன்னியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், வாக்கு மேன்மை. |
| துலாம் | வேலைச்சுமை, முயற்சி தாமதம், வீண் செலவு, வாக்குமேன்மை. |
| விருச்சிகம் | ஜனவசியம், நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, போசனநன்மை. |
| தனுசு | சயனசுகக்குறைவு, சுபசெலவு, உறவினர் வெறுப்பு, வேலைச்சுமை. |
| மகரம் | மனமகிழ்ச்சி, நல்ல முயற்சி, தெய்வ சிந்தை, நண்பர்கள் உதவி. |
| கும்பம் | சுபநிகழ்ச்சி, தொழில் மேன்மை, பிறர் உதவி, எடுத்த காரியம் கைகூடும். |
| மீனம் | வயிற்றுவலி, சரீரப்பிரயாசை, புதிய முயற்சி, கட்டுப்பாடு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## பாடசாலை ரீதியில் "ஆலோசனையும் வழிகாட்டலும்"

பாடசாலை ரீதியில் ஆலோசனையும் வழிகாட்டலும் 2ஆம் தவணையிருந்து நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 500 பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சின் வழிகாட்டலும் ஆலோசனையும் செயற்பாட்டுக்கான பிரிவும் மாகாண மட்டத்திலான செயற்பாட்டுப் பிரிவும் செய்துள்ளன. ஆலோசனையும் வழிகாட்டலும் சேவையை நடைமுறைப்படுத்த வலய ரீதியாக 105 ஆசிரியர் ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் ஆலோசகர் ஊடாக பாடசாலை மட்டத்தில் ஆலோசனை, வழிகாட்டலுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி அளிப்பதற்கு வசதியாக வலய மட்டத்திலான வள, ஆளணிக் குழு, மாகாண மட்டத்திலான ஆளணிக் குழு, தேசிய மட்டத்திலான வலி, ஆளணிக்குழு என மூன்று வள ஆளணிக் குழுவினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய கல்விச் சீர்த்திருத்தின்படி பாடசாலை மட்டத்தில் ஆலோசணையும் வழிகாட்டலும் சேவையை செயல்முறைப்படுத்த வலியுறுத்தப்பட்டிருப்பதுடன் 300 மாணவர்களுக்குக் கூடுதலாகக் கல்விகற்கும் பாடசாலைகளில் ஓர் ஆசிரியர்குழு முழு நேரமாகவும், 300 மாணவர்களுக்கு குறைவான தொகையில் கல்வி கற்கும் பாடசாலைகளில் பகுதி நேரமாக 15 மணித்தியாலயங்கள் ஆசிரியர் ஒருவரை வகுப் பறைக் கற்பித்தலில் இருந்து விடுவித்து 'ஆலோசனையும் வழிகாட்டலும்' சேவைக்குப் பொறுப்பாக நியமிப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதோடு பாடசாலைகளில் ஆளணி தொடர்பான 2003/38ஆம் இலக்கச் சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

## பதிவுகளை மேற்கொள்ளலாம்

திருக்கேதீஸ்வர ஆலய மகாசிவராத்திரி உற்சவத்திற்கு பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து ஒரு பேரூந்தும், காரைநகர் சாலையிலிருந்து ஒரு பேரூந்தும், யாழ்.பஸ் நிலையத்திலிருந்து மூன்று பேரூந்துகளும் நேரடியாக 25ஆம் திகதி காலை 7.00 மணியிலிருந்து புறப்படவுள்ளன.

பயணம் செய்வோர் 24ஆம் திகதிக்கு முன் ஆசனப்பதிவுகளை முற்கூட்டியே யாழ்.பஸ்நிலையத்தில் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. ஆசனப் பதிவுக் கட்டணமாக 15ரூபா அறவிடப்படும்.

அத்துடன் யாழ்.பஸ்நிலையம் மற்றும் பருத்தித்துறையிலிருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு செல்லும் பயணிகளுக்கு பயணக்கட்டணமாக 200ரூபாவும் காரைநகரில் இருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு செல்லும் பயணிகளுக்கு 225ரூபாவும் அறவிடப்படும். (க)



இலங்கை வங்கி மேற்றரக்கிளை விளையாட்டுக்கழகத்தின் 60 ஆவது ஆண்டை முன்னிட்டு தெல்லிப்பழை மனநோயாளர் மருத்துவமனைக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு இரும்புப் பெட்டகங்களை மேற்படி வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் என்.சிவரத்தினம், வைத்திய கலாநிதி (ஆர்.எம்.ஓ) எஸ்.பேரின்ப நாயகத்திடம் கையளிக்கிறார்.

(படம்:- திலீவின்பன்)

# கிராம அலுவலர்கள் வசிக்க வேண்டிய இடம் சுற்றறிக்கை மூலம் நிர்ணயம்

கிராம அலுவலர்கள் தாம் கடமையாற்றும் கிராம அலுவலர் பிரிவிலேயே வசிக்க வேண்டும் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திசநாயக்க சகல மாவட்டச் செயலாளர்களுக்குச் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

அமைச்சின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கையில், பொது மக்கள் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகள், கஷ்டங்கள் பற்றி அடிக்கடி இந்த அமைச்சுக்கு முறையிட்டுள்ளார்கள்.

கிராம அலுவலர்கள் தங்கள் பிரிவுக்குள் வசிக்காத காரணத்தினாலேயே இவர்கள் கஷ்டத்துக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது என அறியப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான வதிவிட நற்சான்றிதழ் பெறுவதிலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டியபோது உரிய நேரத்தில் இவ்வாவணங்களைச் சமர்ப்பிக்க முடியாமலும் பல கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள்.

இவ்வாறான சூழ்நிலையை நீக்கும் பொருட்டு அமைச்சின் தீர்மானப்படி சகல கிராம அலுவலர்களும் தாம் கடமையாற்றும் பிரிவிலேயே வசிக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையின் பிரதிகள் மாவட்டச் செயலாளர்களினால் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கிராம அலுவலர்களுக்கு 60 வயதுக்கு மேல் சேவை நீடிப்போ/மீள் நியமனமோ வழங்கப்பட மாட்டாது என்ற தீர்மானம் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (து)

## சமூகக் கல்வி கற்பித்தல் உபகரணப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான, சமூகக்கல்வி கற்பித்தல் உபகரணப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் தெரிவித்தார். (க-7)

# தேசிய ஆசிரியர் இடமாற்ற கொள்கை அமுல்படுத்தப்படும்

(கொழும்பு)

நாட்டில் கல்வித் துறையில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைச் சீர்செய்ய தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கையொன்று அமுல் செய்யப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

இதன்மூலம் ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவையான வகையில் ஆசிரியர்களை சேவையில் ஈடுபடுத்த முடியுமென அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இவ்வாண்டு கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சிகளை முடித்துக்கொள்ளும் 3 ஆயிரம் பேரையும், பட்டதாரிகள் 2ஆயிரம் பேரையும் ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அவர்கள் முதற்கட்டமாக பின்தங்கிய பிரதேசங்களில் சேவையாற்றுவார்கள் என்றும் கல்வி அமைச்சர் கூறினார்.

கல்வியியற் கல்லூரிகளில் பயின்ற ஆசிரியர்களை நியமிக்கும் போது பின்தங்கிய பிரதேசங்களில் கூடுதலானோர் சேவையாற்ற விரும்பும் வகையிலான முறை உருவாக்கப்படும்.

இதன் பிரகாரம் ஆசிரிய பயிலுநர்கள் தத்தமது பிரதேசங்களில் நியமனம் பெறக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.

இதனால் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நீக்கமுடியுமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

இவை சிறிய நகரங்களைச் சார்ந்ததாக ஆசிரியர் கிராமங்களை நிலவும் திட்டத்தை ஆரம்பிப்பதற்கும், கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

# விசேட ஆணைக்குழுவை நியமிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலை செய்வோரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கத்தி⁻. தலைவர் இதுதொடர்பில் கருத்துத் ѕதரிவிக்கையில்,

இது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டு வரும் நடைமுறைகள் முற்றிலும் போதுமானதாக இல்லை என்றார்.

குறிப்பிட்ட தூதரகங்களில் உள்ள ஊழியர்களின் பற்றாக்குறையே, வெளிநாடுகளில் வேலைசெய்வோர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு முக்கிய தடையாகவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கருத்துரைக்கமைய, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வெளிநாட்டில் வேலை செய்பவர்கள் தொடர்பாக பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் இந்த ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென தற்போது மேற்கொள்ளப்படும் திட்டம் குறித்தும் அவர் பாராட்டுத் தெரிவித்தார். (கு-7)

# ஜெனீவாப் பேச்சுவார்த்தை வெற்றிபெற மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகள் ஆசி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் நடைபெற இருக்கும் பேச்சுவார்த்தை வெற்றி பெற்று நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென மல்வத்தை பீடத்தின் மகா நாயக்கர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல சித்தார்த்த தேரர் ஆசி வழங்கியுள்ளார்.

ஜெனீவா பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேர்மையாகவும் உளம் திறந்தும் இரு பகுதியினரும் இப்பேச்சுவார்த்தைகளில் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

சமாதானத்தை மீண்டும் உயிர்ப்பிக்கவே முக்கிய இடம் வழங்கப்படவேண்டும்.

இதனை முன்னெடுக்க கட்சிகளையோ இனங்களையோ பார்க்க வேண்டிய அவசியம் கிடையாது.

எல்லோரினதும் விருப்பத்தை அறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

சமாதான நடவடிக்கைகளுக்கு அனைத்து கட்சிகளும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

பேச்சுவார்த்தைகளின் போது ஈடுபாடு கொள்வோர் தங்களது கடும்போக்கை தளர்த்தி சமாதானம் ஏற்படக்கூடிய அனைத்து சாத்தியக்கூறுகளையும் முன்வைத்து புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுப்புடனும் சகிப்புத் தன்மையாக தம்மை வழிநடத்திக் கொள்ளவேண்டும் என்றார்.

இதேவேளை, அஸ்கிரிய பீடாதிபதி கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனைத்து அரசியல் கட்சிகளையும், குழுக்களையும் அழைத்து அவர்களது அபிப்பிராயத்தைப் பெற்றமை, இதனை முன்னெடுத்துச் செல்ல பெரிதும் உதவியாகிவிட்டது.

யுத்தத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு புதியதோர் சிந்தனையில் ஜெனீவா பேச்சுவார்த்தைகளை தொடக்கி வைக்க முற்பட்டமை பெரும் செயலாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளை இப்பேச்சுவார்த்தைகளில் பங்கெடுக்க வைக்கும் முயற்சியானது நாட்டு மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவல் மூலம் நாட்டை துண்டாடாது வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி முன்வந்தமை பாராட்டுக்குரியது என்றார்.

பௌத்த பீடத்தின் செய்லாளர் பேராசிரியர் வண. வரகாலே தம்மாலேக்க தேரர் கருத்து தெரிவிக்கையில்,

நான் பதவிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் நாட்டின் முக்கிய பிரச்சினையாக இருந்து வரும் வடக்கு- கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என ஜனாதிபதி வழங்கிய உறுதி இன்று செயல் உருவம் பெற்றுவிட்டது.

சமாதானப் பேச்சுக்களில் அரசு சார்பில் கலந்துகொள்ள நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மிகப் பொருத்தமானவர்கள்.

ஏதோ ஒரு காரணத்தினால் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நம்பிக்கை இழந்து போனாலும் கூட அதனை மீண்டும் ஏற்படுத்த இப்பொழுது நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதன்மூலம்நிரந்தர சமாதானம் ஏற்படுத்த இருதரப்பும் முன்வரவேண்டும் என்று குறிப்பிட் டார். (க-9)

# விசேட பொலிஸ் நடவடிக்கை செயலகம் ஸ்தாபிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை சீரான முறையில் முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் விசேட பொலிஸ் நடவடிக்கை செயலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலகம் 24 மணித்தியாலமும் இயங்கும் என்றும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் இச்செயலகத்திற்கு தலைவராக இருப்பார் என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்தார்.

இந்தச் செயலகத்தில் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைத் தாக்கல் செய்ய முடியும் என அவர் கூறினார்.

செயலகத்துடன் தொலைபேசி மூலமோ தொலைநகல் மூலமோ தொடர்புகொள்ள முடியும். தொலைபேசி இல: 2333389, தொலைநகல் இலக்கம்: 2440433 இதனுடன் இணைந்ததாக ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலுள்ள நடவடிக்கை செயலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

விசேட பொலிஸ் தேர்தல் நடவடிக்கை செயலகம் அவற்றின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், பிரசார நடவடிக்கைகளை சுதந்திரமாக வும், அமைதியாகவும் மேற்கொள்வார்கள் என்று பொலிஸ் திணைக்களம் நம்பிக்கை கொண்டுள்ளது.

எனினும் வன்முறைகளிலும் மோசடிகளிலும் ஈடுபடும் நபர்கள் பற்றிய முறைப்பாடுகளை துரிதமாக விசாரித்து, கடும் நடவடிக்கை எடுக்கப்பேரவதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பிரசாரத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் தபால் மூலம் வாக்களிப்புகள் நடைபெறும் தினத்திலும், தேர்தல் தினத்திலும் முடிவுகள் அறிவிக்கப்படும் வரையிலான காலப்பகுதியிலும் விசேட பாதுகாப்புத் திட்டம் அமுல்செய்யப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் துரித திட்டம் தற்போது அமுல்செய்யப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின்கீழ் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் பலர் நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

விடுபட்டவர்களை விரைவில் ஆசிரியர் சேவையில் உள்வாங்கிக் கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏனைய மாகாணங்களில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் பற்றிய விபரங்கள் இன்னும் கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் இதனால் நியமனங்கள் தாமதமாகின்றன எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் தொண்டர் ஆசிரியர்கள் பற்றிய தகவல்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு மாகாண கல்வி அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-7)

## சாவகச்சேரி உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் உள்ள உணவகங்கள் சிலவற்றில் சுகாதார சீர்கேடு நிலவுவதாக சாவகச்சேரி சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

உணவகங்களில் உணவுகள் கைகளாலே எடுத்து பரிமாறப்படுவதாகவும் அதற்குரிய உபகரணங்கள் பாவிக்கப்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கேட்கப்படும் உணவுகள் மட்டுமே வழங்கப்படும் என்ற கட்டளையை எவரும் பின்பற்றுவதில்லை எனவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு காணப்படும் உணவகங்கள் மீது நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படும் எனவும் சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார். (க-108)

## கலந்துரையாடல்

அரியாலை மற்றும் கொழும்புத்துறை, பாசையூர்ப் பகுதிகளுக்கான வலய அபிவிருத்திக்குழுவுடனான கலந்துரையாடல், பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் நாளை வியாழக்கிழமை முறையே மு.ப.9.00 மணிக்கு அரியாலை கலைமகள் வீதி மகப்பேற்று நிலையத்திலும் பி.ப.1.00 மணிக்கு கொழும்புத்துறை சுவாமியார் வீதி மகப்பேற்று நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

சுகாதாரப் பாதுகாவலர், சுகாதார மேற்பார்வையாளர்கள், வேலை மேற்பார்வையாளர்கள் கலந்துகொள்ளும் மேற்படி கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட பகுதி சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும் தவறாமல் கலந்துகொள்ளும்படி பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர் து.மகாதேவன் கேட்டுள்ளார். (க)

## இன்று ஒரு தகவல்

# நம்பிக்கை

காசி ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் காசி விஸ்வநாதன் இறைவி காசி விசாலாட்சி. ஒரு நாள் அவர்கள் இருவரும் அமர்ந்து ஆன்மீக விஷயங்கள் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது காசி விஸ்வநாதர் இந்த மனிதர்களை நாம் மிகவும் நம்பிக்கையுடன் தான் படைத்திருக்கிறோம். இருந்தாலும் அவர்களுக்குத் தான் போதிய நம்பிக்கை இல்லை. எதிலும் ஓர் உண்மையான நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!' என்றார்.

அதைக் கேட்டதும் ஜகன்மாதாவாகிய விசாலாட்சி என்ன அப்படி சொல்கிறீர்கள்? அதோ பாருங்கள் எவ்வளவு பேர் காசியைத் தேடி வந்து கங்கையில் நீராடிக் கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்கெல்லாம் நம்பிக்கை இல்லாவிட்டால் இவ்வளவு தூரம் காசியைத் தேடிக்கொண்டு இங்கே வருவார்களா? என்று வினவினாள்.

'சரி அதைச் சோதித்துப் பார்க்கலாம் என்று இருவரும் முடிவு செய்தார்கள். உடனே ஒரு திட்டம் போட்டார்கள். அந்த திட்டம் இதுதான். நாம் இருவரும் பக்தர்கள் போன்று உருவத்தை மாற்றிக் கொண்டு கங்கைக் கரைக்குப் போகலாம். நான் கங்கையில் இறங்கி குளிக்கிறேன்.-சிறிது நேரத்தில் நீர் சுழலில் மாட்டிக்கொண்டது போல் நான் நடிக்கிறேன். நீ உடனே கரையிலிருந்து சத்தம்போடு... என் கணவரை யாராவது காப்பாற்றுங்கள்! என்று கூச்சல் போடு... அதோடு இன்னொன்றும் சொல். யாராவது ஒரு புண்ணியாத்மா என் கணவரிடம் சென்று அவரது முடியைப் பிடித்துத் தூக்க வேண்டும். அப்படி ஒரு சாபம் எங்களுக்கு இருக்கிறது. புண்ணியாத்மா...அதாவது எந்தப் பாவமும் இல்லாத ஒருவர்தான் அவரைக் காப்பாற்ற முடியும்! அப்படிப்பட்டவர்கள் யாராவது வெள்ளத்தில் குதித்து என் கணவரைச் சீக்கிரம் காப்பாற்றுங்கள்! என்று சொல்லிக் கூச்சல் போடு.... பிறகு என்ன நடக்கிறது பார்க்கலாம்! என்றார் கடவுள்.

அவ்விதம் ஜகன்மாதாவும் ஜகத்பிதாவும் சாதாரண பக்தர்கள் உருவத்தில் கங்கைக் கரைக்கு வந்தார்கள். இறைவன் கங்கையில் இறங்கி குளிக்க ஆரம்பித்தார். சிறிது நேரத்தில் திட்டம் போட்டது போலவே சுழலில் மாட்டிக் கொண்டவர் போல் கத்தினார். கரையில் இருந்த விசாலாட்சி தேவி 'ஐயோ என் கணவரைக் காப்பாற்றுங்களேன்!' என்று அலறினாள். பல பேர் ஓடிவந்தார்கள். உடனே இறைவி பாவம் இல்லாத புண்ணியாத்மா ஒருவரால் தான் என் கணவர் காப்பாற்றப்படவேண்டும் என்ற விதி இருக்கிறது. ஆதலால் புண்ணியாத்மா யாராவது அவரிடம் போய் அவரது முடியைப் பிடித்துத் தூக்கினால் அவரைக் காப்பாற்றி விடலாம்!" என்று தெரிவித்தார்.

ஜகன்மாதா இப்படி கூறியதும் எல்லோரும் திகைத்துப் போய் நின்று விட்டார்கள். அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் செய்த பாவமெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வர ஆரம்பித்தது. சரி இதற்கு நாம் தகுதி இல்லை என்று ஒவ்வொருவரும் ஒதுங்கிப் போக ஆரம்பித்தார்கள்.

இந்தச் சமயத்தில் யாரோ ஒருவன் வேகவேகமாக அங்கே ஓடி வந்தான். ஆற்றில் குதித்தான். நீரில் மூழ்கும் நிலையில் இருந்தவரிடம் சென்றான்.அவரது முடியைப் பிடித்துத் தூக்கினான். அவரைக் காப்பாற்றிக் கரையில் கொண்டுவந்து சேர்த்தான்.

அப்படிக் காப்பாற்றிய அந்த ஆளை... இவர்கள் இருவரும் தனியாக ஒரு மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள். "நீ யாரப்பா?" என்று எதுவும் தெரியாதவர்கள் போல் விசாரித்தார்கள். "நான் இந்த ஊர் அன்னசத்திரத்தில் வேலை செய்யும் ஒரு சமையல்காரன்" என்று அந்த ஆள் கூறினான்.

"நீ கங்கையில் குளிப்பதுண்டா?" என்று வினவினார்கள். "நான் இந்த ஊரில்தான் இருக்கிறேன். இருந்தாலும் தினமும் கங்கையில் குளிப்பதில்லை எப்போதாவது ஒரு நாள் அங்கே குளிப்பேன் !" என்றான் சமையல்காரன். "கங்கையில் மூழ்கி எழுந்தால் பாவம் தொலையும் என்று சொல்கிறார்கள்.அப்படி இருக்கும்போது அங்கே இன்றைக்கு கங்கையில் குளித்துக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் தங்களைப் புண்ணியாத்மாவாக நினைக்கவில்லை. கங்கையில் குளிக்காத நீ... உன்னை புண்ணியாத்மாவாக நினைத்து என்னைக் காப்பாற்றுவதாக வந்தாயே... அது எப்படி?" என்று இறைவன் கேட்டார். அதற்கு அந்த ஆள் "கங்கையில் குதித்தற்குப் பிறகுதானே உங்களைக் காப்பாற்றப் போகிறேன். அப்படி குதிக்கும்போதே என்பாவமெல்லாம் போயிருக்குமே... நான் புண்ணியாத்மாவாக ஆகியிருப்பேனே... அதனால் தான் துணிந்து வந்து உங்களைக் காப்பாற்றினேன்!" என்று பதில் கூறினான்.

பிறகு அவனுக்கு இறைவனும் இறைவியும் காட்சி கொடுத்தார்களாம். கங்கையில் குளித்துக் கொண்டிருப்பவர்களுக்கே தங்களுடைய பாவம் போகும் என்ற நம்பிக்கை பரிபூரணமாக இல்லை! குளிக்காத ஒருவனுக்கு அந்த நம்பிக்கை இருந்தது! அதனால் தான் அவனால் காசி விஸ்வநாதரையும் விசாலாட்சியையும் தரிசிக்க முடிந்தது. நாம் நம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்பதே இந்தக் கதையின் முக்கிய கருத்து.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலனாய்வுத்துறை அதிகாரங்களை இராணுவத்திடம் கையளிக்கத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் முக்கிய புலனாய்வுப் பிரிவான உள்ளகப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் சபை மற்றும் வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் சபை ஆகியவற்றின் தற்போதைய அதிகாரத்தின் ஒரு பகுதியை இராணுவத்தின் வசம் ஒப்படைப்பதற்கான இரகசியத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாக இராணுவத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டத்தின் பின்னால் கடந்த காலங்களில் இலங்கையைவிட்டு வெளியேறி வெளிநாடுகளில் மறைந்திருந்த உயர் பதவிகளை வகித்த இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட இராணுவத்தின் அதிகாரிகள் சிலர் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரங்கள் தற்போது பொலிஸ் திணைக்களத்தின் வசமே உள்ளது.


கடந்த காலங்களில் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் பலரின் ஊழல் மோசடிகள் குறித்து கண்டறிந்து அது தொடர்பில் அவர்கள் அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இவற்றில் சில அறிக்கைகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

இந்த அறிக்கைகள் சர்வதேச ஊடகங்களினது கவனத்திற்கும் சர்வதேச உளவுப்பிரிவுகளின் விசாரணைகளுக்கும் இலக்காகியுள்ளனர்.

உள்ளகப் புலனாய்வுப் பணிப்பாளர் சபை மற்றும் வெளிநாட்டு புலானாய்வு பணிப்பாளர் சபை ஆகியவற்றை முழுமையாக மறுசீரமைத்து அதன் ஒரு பகுதி அதிகாரத்தை இராணுவத்தின்வசம்கையளிப்பதற்கான திட்டத்தின் பின்னணியில் இந்த அறிக்கைகள் உள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க)

# தடம் புரண்ட லொறியில் சிக்கி சாரதி படுகாயம்







நேற்று முன்தினம் மாலை காங்கேசன்துறை வீதியில் றொட்டியாலடி சந்திக்கு அருகாமையிலுள்ள ஏரி பொருள் நிரப்பு நிலையத்திற்குப் பக்கத்தில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த லொறியொன்று வீடொன்றினுள் புகுந்து தடம் புரண்டதால் லொறி பலத்த சேதத்துக்குள்ளானதுடன் அதனைச் செலுத்தி வந்த முள்ளியவளையைச் சேர்ந்தவரான எஸ்.ஜெகதீஸ்வரன் (வயது 43) இரண்டு கால்களும் முறிந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மல்லாகத்தைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்குவதற்காக இந்த லொறியை ஓட்டிப் பார்த்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தடம்புரண்ட லொறியையும் காயமடைந்த வரையும் படங்களில் காணலாம். (து-133)

## கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கையர்

சோமாலியாவில் கடற்கொள்ளையர்களினால் கடத்திச் செல்லப்பட்ட இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் தொடர்பாக இதுவரை உரிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆராயுமாறு சோமாலிய ஓமன் நாடுகளுக்கான இலங்கைத் தூதரகங்களுக்கு அறிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் ஆலோசனைப் பிரிவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட பொறியியலாளர் சோமாலியாவில் உள்ள வீடு ஒன்றில் இருந்ததாகத் தகவல் கிடைத்துள்ளது எனவும் அவர் வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஓமான் கப்பல் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையிலேயே இவர் கடத்தப்பட்டுள்ளார். அண்மைக்காலங்களில் சோமாலியா கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்ட மூவர்களின் மூன்றாவது இலங்கையர் இவராவார். இதற்கு முன்னர் சோமாலியா கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்ட இலங்கையர்கள் இருவர் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சோமாலியா கடற்பகுதியின் ஊடாகச் செல்லும் கப்பல்களில் கடமையாற்றுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு ஏற்கனவே இலங்கையர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பொலிஸ் உப சேவையில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பொலிஸ் உப சேவையில் பெண் உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் பதவிகளுக்கே பொலிஸ்மா அதிபரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் மார்ச் மாதம் 10 ம் திகதி இதற்கான விண்ணப்ப முடிவுதினமாகும். (து-9)

## ஜீவனோபாய அபிவிருத்தி செயல்திட்டக் கருத்தரங்கு

சேவாலங்கா நிறுவனத்தால் ஜீவனோபாய அபிவிருத்தி செயல்திட்டம் தொடர்பாக ஒரு முழுநாள் கருத்தரங்கும் பயிற்சிப்பட்டறையும் நேற்று புலோலி விவசாய அபிவிருத்தி சேவை மையத்தில் காலை 10 மணியளவில் நடாத்தப்பட்டது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் யாழ்ப்பாண சேவாலங்கா நிறுவனப் பணிப்பாளர் ஆர். அன்ரனி ஆனந்தராஜா இச் செயற்திட்டம் தொடர்பாக விளக்கமளித்தார். செயற்றிட்ட முகாமையாளர் கீத. பொன்கலன் செயல்திட்டம் பற்றி விரிவாக விளக்கமளித்தார். தமது நிறுவனத்தால் வழங்கப்படும் கடன் திட்டம்பற்றி கடன் திட்டமுகாமையாளர் ஜி.சபேஷன் விளக்க மளித்தார்.

இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கருத்துரையாற்றினார்.

மீன்பிடி நடவடிக்கைக்காக ஆயிரத்து 250 குடும்பங்களுக்கு மானியமாக 18 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் கடனாக 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், விவசாய நடவடிக்கைக்காக 650 குடும்பங்களுக்கு மானியமாக 65 இலட்சம் ரூபாவும் கடனாக 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஏனைய தேவைகளுக்காக மானியமாக 190 குடும்பங்களுக்கு 28 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கடனாக 19 இலட்சம் ரூபாவும்,

உட்கட்டுமான நடவடிக்கைக்கு 19 கிராமங்களில் 37 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் பயிற்சிக்காக 11 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக கடன் திட்ட முகாமையாளர் ஶ்ரீ. சபேசன் தெரிவித்தார். கருத்தரங்கில் பயனாளிகள், கிராம அலுவலர்கள், பிரதேசசங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (து-101)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பளை கட்டுவன் புலம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1மணிக்கு பாடசாலை அதிபர் சி. சந்திர குமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியர் யோ. மாணிக்கமும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியர் சி. ராஜசௌந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-7)

# ஜெனீவாவில் பாவசிங்கம் தம்பதியினருக்கு அளிக்கப்பட்ட உர்சாகமான வரவேர்பு

















# தரம் - 5 புலமைப்பரிசில்


## பயிற்சி வினாத்தாள்

இல: 07

ஆக்கம்: மூ.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை


வினாத்தாள் – I நேரம்: 45 நிமிடம்


கீழேயுள்ள பிராணிகளின் பண்புகளுக்கேற்ப பொருத்தமான விடையின் இலக்கத்தில் அடையாளம் ⊗ இடுக.

01.

(1)குரைக்கும் (2)நன்றியுடையது (3)கடிக்கும்


02.


(1)பெரியமிருகம் (2)பாரம்தூக்கும் (3)அடங்கி நடக்கும்

03.

(1)சாதுவானது (2)புல்மேயும் (3)பால் தரும்




04.

(1)தந்திரம் (2)ஒற்றுமை (3)கறுப்பு

கீழேயுள்ள உருக்களில் புள்ளடியிடப்பட்ட கூட்டுக்குப் பொருத்தமான பகுதியைத் தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

05.

(1) (2) (3)

06.

(1) (2) (3)

கீழேயுள்ள உபகரணங்களில் அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் உபகரணத்தின் கீழ் புள்ளடியிடுக.

07.





கீழுள்ள திசை காட்டல் பெட்டியில் தரப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாக வெற்றிடங்களை நிரப்புக.

| | | |
|---|---|---|
| 8 | 9 | 10 |
| | | |
| 11 | | 12 |
| | சந்தை | |
| 13 | 14 | 15 |
| | | |


(A)சந்தையின் மேற்கே தேவாலயம் அமைந்துள்ளது.
(B)தேவாலயத்தின் வடக்கே பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது.
(C)சந்தையின் அக்கினி மூலையில் பாடசாலை அமைந்துள்ளது.
(D)பாடசாலைக்கு மேற்கே இந்துக்கோயில் அமைந்துள்ளது.
(E)சந்தையின் நிருதி மூலையில் வைத்தியசாலை அமைந்துள்ளது.
(F)புகையிரத நிலையத்துக்குத் தெற்கே வைத்தியசாலை அமைந்துள்ளது.
(G)சந்தையின் வாயு மூலையில் பள்ளிவாசல் அமைந்துள்ளது.
(H)பொலிஸ் நிலையத்தின் மேற்கே தபால் நிலையம் அமைந்துள்ளது.


தவறான தொடர்பின் கீழ் M என அடையாளம் இடுக.


16.


| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| லீற்றர் | மல்லிகிராம் | டசின் | கிலோமீற்றர் |
| பெற்றோல் | தங்கம் | சீனி | தூரம் |

கோலங்களை அவதானித்து இடைவெளிகளை நிரப்புக.

17.



18.



19.



20.



எனது மேனி பஞ்சுபோன்றது. மீசை கம்பி போன்றது கண்கள் மினு மினுப்பானவை. வேட்டையாடும் போது குந்தியிருந்து எனது வாலை ஆட்டுவேன். ஆனால் வீடுகளில் வசிப்பேன்.

21.மேலேயுள்ள தகவல் யாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது?
.....................................................................

22.இது விரும்பிக் குடிப்பது?
.....................................................................

23.முக்கியமாக வேட்டையாட இலக்குவைக்கும் பிராணி?
.....................................................................

24.வீடுகளில் இப் பிராணியின் எதிரி?
.....................................................................

25.காடுகளில் வேட்டையாடும் இக் குடும்பத்தைச் சேர்ந்த மிருகம் எது?
.....................................................................

என்னுடைய அப்பா யாருக்கு மாமனாரோ அவருடைய மருமகனுடைய அப்பா எனக்கு மாமனார்.


சரியான விடையைச் சுற்றிக் கட்டமிடுக.

26. இக்கூற்று : (1) சரி (2) பிழை (3)கூறமுடியாது

சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

27. கறையான் அரிக்காத மரம் (பலா, தேக்கு, சப்பு)
28. நின்றபடி முட்டையிடும் பறவை (மயில், பென்குயின், கிவி)
29. பாலைவனக் கப்பல் எனப்படுவது (கழுதை, குதிரை, ஒட்டகம்)
30. வருடம் முழுவம் மலரும் பூ (லில்லிப்பூ, நித்தியகல்யாணி, தாமரை)

கீழே காணப்படும் உருவை அவதானித்து 31 - 34 வரையான வினாக்களுக்கு விடை தருக.




31. வட்டத்துக்கு மட்டும் உரிய இலக்கங்கள் எவை? ..........................
32. வட்டத்துக்கும் சதுரத்துக்கும் மட்டும் உரிய இலக்கங்கள் எவை?
..........................
33. வட்டம், சதுரம், முக்கோணம் ஆகியவற்றுக்குப் பொதுவான இலக்கம் எது?
..........................
34. சதுரத்திற்கு மட்டும் உரிய இலக்கம் எது? ..........................

(07ஆம் பக்கம் பார்க்க)

# மஹிந்த சிந்தனையை அர்ப்பணிப்புடன் செயற்படுத்த உறுதி

## வாசுதேவ நாணயக்கார

மஹிந்த சிந்தனைகள் என்ற கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள யோசனைகளையும், திட்டங்களையும் அமுல்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படப்போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையின் முதல்வர் பதவிக்காக தேர்தல் களத்தில் குதிக்கும் இவர் இந்தச் சபையில் சோசலிஸ ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காக, அனைத்து இடதுசாரிக் கட்சிகளையும் அணி திரட்டப் போவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மாநகர சபையில் நிகழ்வதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, பாரிய மாற்றத்தை மேற்கொள்ளப்போவதாகவும் கூறினார்.

மேலும் கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் சேரிவாழ் மக்களின் வீடமைப்புப் பிரச்சினை முட்டுக் கட்டையாக மாறியிருக்கிறது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும் நாணயக்கார கூறினார்.

இவ்வாறு தான் ஆட்சிப்பீடம் ஏறும் பட்சத்தில் மாநகர சபையின் நிதி, நிர்வாகம் பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-7)

## 'காதல் கடிதம்' இணையத்தள அங்குரார்ப்பண வைபவம்

(யாழ்ப்பாணம்)

'காதல் கடிதம்' எனும் இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு இன்று பி.ப 3 மணிக்கு இல.303, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு - 07 இல் அமைந்துள்ள தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கனி கேட்போர் கூடத்தில், தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அசோக சேரசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது. (க)

# உடனுக்குடன் பேச்சுவார்த்தைத் தகவல்கள்

ஜெனீவாவில் அரசாங்கப் பிரதி நிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இன்று நடைபெறும் பேச்சுவார்த்தை சம்பந்தமான விடயங்கள் உடனுக்குடன் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு அறிவிக்கப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரு தரப்புப் பேச்சுவார்த்தைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருக்கும் சுவிற்சர்லாந்துத் தூதரகம் இது தொடர்பான விபரங்களை வெளியிடவில்லை.

செய்மதி தொலைபேசி வசதிகள் இருப்பதனால் இதில் பிரச்சினை இருக்காது எனத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (து)

# அரச சேவையில் இரு மொழிக்கொள்கை; அமுல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அரச சேவையில் இரு மொழிக்கொள்கையை அமுல்படுத்தும் முயற்சிகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதன் பிரகாரம் அரச ஊழியர்கள் தமது தாய்மொழிக்கு அடுத்ததாக உள்ள இரண்டாவது அரச கருமமொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது கட்டாயமாக்கப்படும்.

அவ்வாறே புதிதாக அரச சேவையில் இணையும் ஊழியர்கள், இரு மொழிகளிலும் செயலாற்றக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பது அவசியமானது என அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனைக் கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டிருக்கும் இரு மொழிக் கொள்கைகள் பற்றிய உறுதி மொழிகளை நிறைவேற்றும் நோக்கத்துடன், இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

இவ்வாறு இரு மொழிகளில் தேர்ச்சி பெற்றிருக்கும் அரச ஊழியர்களுக்குத் தொடர்ந்தும் சம்பள அதிகரிப்பு மற்றும் சலுகைக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

அத்துடன் இருமொழிக் கொள்கைகள் அமுல்படுத்துவதற்கு வசதியாக ஆட்சேர்ப்பு விதிமுறைகள் திருத்தப்பட்ட இருக்கின்றன.

நிதி அமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சுக்களின் உதவியுடன் மொழிப் பயிற்சித் திட்டங்கள் அமுல் செய்யப்படுமென விக்கிரம சிங்க மேலும் குறிப்பிட்டார். (க-7)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு வித்தியாலய அதிர் அ.அருந்தவேநேசன் தலைமையில் நடைறெவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சமூக உளவியல் திட்டப் பணிப்பாளர் செல்வி கறினி ளிக்சனும், சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்குப் பகுதிச் செயலாளர் இ.மயில்வாகனம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (த-79)

# விஞ்ஞான, கணித பாடங்களின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காக விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 150 பாடசாலைகளில் இந்தத் திட்டம் செயற்படுத்தப் படவுள்ளது.

ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட 'கைசன் திட்டத்தின்' பிரதி பலிப்புகள் தொடர்பாக, இடம்பெற்ற ஆய்வு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கல்வி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள பாடசாலைகளின் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களின் முன்னேற்றத்துக்கான கைசன் செயற்திட்டம் 2002ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது.

இவ்வாறு 22 பாடசாலைகளில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 2ஆவது கட்டமாக 150 பாடசாலைகளுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-7)

# கண்காட்சியும் விற்பனையும்

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சங்கானை பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்படும் கைப்பொருள் கண்காட்சியும் விற்பனையும் வட்டு இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமையும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.தேவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸும், சிறப்பு விருந்தினராக வலிமேற்கு உதவிப் பிரதேச செயலர் திருமதி பாபு தேவந்தியும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தியும் வலி மேற்கு பிரதேச செயலக தலைமைப் பீட கிராம உத்தியோகத்தர் ஏ.சபாநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (து)

## புள்ளிவிபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட திட்டமிடல் செயலகத்தினால் பிரதேச செயலக ரீதியாக குடித்தொகை சார் புள்ளிவிபரங்கள் (2006ற்குரியது) சேகரிக்கப்பட்டு வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வெண்களை விரித்தெழுதுக.

35. 2436 → ☐ + ☐ + ☐ + ☐

36. 4459 → ☐ + ☐ + ☐ + ☐

37. 6293 → ☐ + ☐ + ☐ + ☐

38. 9746 → ☐ + ☐ + ☐ + ☐

சரியான கருத்தைத் தரும் வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.

39. (1) அப்பாவி மான் புலிக்கு இரையானது
(2) புலி அப்பாவி மானின் இரையானது
(3) அப்பாவிப் புலி மானின் இரையானது

40. (1) பறவை வானிலே மேலே பறந்தது
(2) வானில் பறவை மேலே பறந்தது
(3) பறவை மேலே வானில் பறந்தது

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் - 5

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

01.ச.பவதாரணி - யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
02.கோ.ஆனந்தகிருஷ்ணன்- யா/சா/இ/ஆ/ பாடசாலை.
03.ச.தக்ஷாயினி - யா/புனித சென் பொஸ்கோ வித்தியாலயம்.
04.செ.நி.பகீரதன் - யா/அ.மி.த.க பாடசாலை துணவி.
05.யோ.ரூபனா - யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.
06.ஜெ.தானுஷா - யா/இந்து தமிழ்கலவன் பாடசாலை.

## வினாத்தாள் - 05 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. 3 | 02. 1 | 03. 1 04. 3 |
| 05. 1 | 06. 1 - 2 | 07. 2 - 3 |
| 08. 2 - 3 | 09. 1 - 4 | 10. 1 - 4 |
| 11. 1 | 12. 2 | 13. ய ம தி த க வ |
| 14. 8, 10, 12, 14, 16 | 15. D F H I | 16. பேரன் |
| 17. பூட்டி | 18. 3 | 19.2 |
| 20. 3 | 21. 150 | 22. $1\frac{1}{2}$ |
| 23. $\frac{1}{10}$ | 24. 1, 2, 3 | 25.10800 |
| 26. வினியோகஸ்தர் | 27. பண்டகசாலை | 28 - 32 சவர்க்காரம்போன்றவை |
| 33.சவர்க்காரம் | 34. களஞ்சியம் | 35. Lux |
| 36. Rexona | 37. Lifebuoy | 38.Sunlight |
| 39. 2 | 40. 2 | |

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 07

மாணவர் முழுப்பெயர் : ........................................
பாடசாலையின் பெயர் : ........................................
வீட்டின் முகவரி : ........................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 28.02.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 07
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# சாரணீயத்தை உலகுக்கு அளித்த



‘என்னால் கூடுமானவரை எனது சமயத்திற்கும் தேசத்திற்கும் எனது கடமைகளைச் செய்யவும் எக்காலத்திலும் பிறருக்கு உதவி புரியவும் சாரண விதிகளுக்கு அமைந்து பணிந்து நடக்கவும் என் கௌரவத்தின் மீது வாக்குறுதியளிக்கின்றேன்’.

என சாரணர்கள் தங்கள் கௌரவத்தின் மீது வாக்குறுதியளிக்கின்ற ஒரு தத்துவம் பொதிந்த வாக்குறுதிக்குள் உலகத்தையே அடக்கிச் சாரணீயமாகத் தந்த சாரணீயத் தந்தையின் 149ஆவது பிறந்த தினத்தை இன்று உலக சாரண சகோதரர்கள், மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

**இன்று அவரது 149 ஆவது பிறந்த நாள்**




# சாரணீயத் தந்தை பேடன் பவல்

சாரணீயத் தந்தை உலக சாரணர் சின்னத்துக்குள்ளே வாக்குறுதியையும் சாரணர் விதிகளையும் அமைத்துள்ளார்.

உலக சாரணர் சின்னத்தில் உள்ள மூன்று இதழ்களும் சமயம், தேசம், பிறருக்குதவி புரிதலைக் குறிக்கும். இரண்டு நட்சத்திரங்களின் முனைகள் பத்துச் சாரண விதிகளான நம்பத்தகுந்தவன், பற்றுறுதியுடையவன், நேசமும் மரியாதையும் உள்ளவன், சகோதரன், தைரியமுள்ளவன், பிராணிகளின் தோழன், ஒத்துழைப்பவன், மகிழச்சியானவன், சிக்கனமானவன், சிந்தனை சொல் செயல்களில் தூய்மையானவன் என்பவற்றையும் குறிக்கின்றது. சின்னத்தை சுற்றி போடப்பட்டுள்ள நேர் முடிச்சு உலக சாரணர்கள், தினமும் ஒரு நற்பணிபுரிய வேண்டும் என்பதை நினைவுகூருகிறது.

அட்மிரல் வில்லியம் சிமித்தின் மகள் கென்றீராகிறேசிக்கும் பேராசிரியர் ஆக்ஸ்வோட் றோபேட் கிறேஸ் பேடன் பவலுக்கும் ஏழாவது குழந்தையாக 1857ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி பிறந்தார்.

பேடன் பவலுக்கு மூன்று வயது இருக்கும்பொழுது தந்தையார் இறந்தார். 11 வயதில் உபகார சம்பளம் பெற்று இங்கிலாந்தின் சாட்டற்ஹவுஸ் கல்லூரியில் மேற்படிப்புக்காக சேர்ந்தார். 19 வயதில் இராணுவத்தின் குதிரைப்படையில் சேர்ந்தார். உபதளபதியாக தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்றார். 26 வயதில் தளபதியான இவர் மேஜர் ஜெனரல் பதவிவரை உயர்ந்தார்.

1901இல் தென்னாபிரிக்காவில் இருந்து பெரும் வீரனாக தாய்நாடு திரும்பினார். பெரும் தொகை சிறுவர் நூல்களைப் படித்தார். இந்தியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு 1903இல் சாரணீயத்துக்கான துணை என்னும் நூலை வடிவமைத்தார். சாரணீயக் கொள்கைகள் வெற்றியளிக்குமா என பரிசோதிப்பதற்காக 1907ஆம் ஆண்டு முதன்முதல் உலகம் கண்ட இருபது சாரணர்களுடன் இங்கிலாந்து கால்வாயில் அமைந்துள்ள ‘பிரவுண்ஸ்’ தீவிலே பாசறை அமைத்து சாரணீய பாசறை வாழ்க்கையை பேடன் பவல் ஆரம்பித்தார்.

சாரணீயம் உலகுக்கு ஒளி கொடுக்கத் தொடங்கியது 1907ஆம் ஆண்டு இந்நாள் பெரும் வெற்றியை பவலுக்கு அளித்தது. 1908இல் ஆறு பிரசுரங்களாக ’இளைஞர் சாரணீயம்’ நூலை வெளியிட்டார். எதிர்கால மக்கள் தன்னம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கு சாரணீய பயிற்சியே சிறந்தது என உணர்ந்தார்.

இராணுவத்தில் வகித்த அதி உயர் பதவிகளை விட்டு 1909இல் இராணுவத்தில் இருந்து விலகினார். இரண்டாவது வாழ்க்கையை சாரணீயத்துக்காக வாழ ஆரம்பித்தார். 1910இல் பெண்கள் சாரணீயத்தை ஆரம்பித்தார்.

பேடன் பவலின் சகோதரி செல்வி அக்னஸ் முதலாவது பெண் சாரணர் ஆக சேர்ந்தார். கடற்சாரணர் பிரிவையும் ஆரம்பித்தார்.

1912 இல் ஒலெவ் சென்கிளயர் சோம்ஸ் என்ற பெண்ணை திருமணம் செய்தார். பிள்ளைகள் பீற்றர், கீதர், பெற்றி பிறந்தனர். இவ்வாண்டில் இலங்கையில் திரு F.G.ஸ்ரீபன் என்பவரால் மாத்தளைக் கிறீஸ்தவக் கல்லூரியில் சாரணீயம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேடன் பவல் சாரணீயத்தை உலக சகோதரத்துவ இயக்கமாக்குவதற்கு உலக சுற்றுலா மேற்கொள்ள தீர்மானித்தார். அப்பொழுது முதலாம் உலக யுத்தம் பிரயாணத்தை தடை செய்தது. 1916இல் ஏழு தொடக்கம் பதினொரு வயது சிறார்களுக்கான குருளைச் சாரணர் பிரிவை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் யா/ மத்திய கல்லூரி, யா/ பரியோவான் கல்லூரி, யா/ சம்பத்தரிசியார் கல்லூரி, யா/ இந்துக் கல்லூரி, யா/ யாழ்ப்பாணக் கல்லூரிகளில் 1918இல் 17-24 வயதினருக்கான திரிசாரணர் பிரிவை பவல் ஆரம்பித்தார். இலங்கையில் கடற்சாரணீயம் ஆரம்பிக்கப்பட்டது.

1919இல் கில்வெல் பாக் அமைக்கப்பட்டது. 1920இல் முதலாவது உலக சாரணர் சம்மேளனத்துக்காக சர்வதேச சாரணர்களும் இலண்டன் ஒலிம்பியாவில் ஒன்று கூடினர். இறுதி நாள் ஆகஸ்ட் 6ஆம் திகதி பேடன் பவல் ‘உலக பிரதம சாரணர்’ எனப் பிரகடனம் செய்யப்பட்டார்.



1921இல் பேடன் பவல் துணைவியாருடன் இலங்கைக்கு முதல் முதல் சாரணீய விஜயத்தை மேற்கொண்டார். அப்பொழுது யாழ்ப்பாணத்தில் சாரணீயம் அதி உன்னதமாக செயல்பட்டுவந்தமை கண்டு பேடன் பவலும் பாரியாரும் யாழ்.சாரணர்களையும், பயிற்றுனர்களையும், மக்களையும் கௌரவித்த பெருமை யாழ்.சாரணர்களுக்கே உரியது.

1925இல் வலது குறைந்தோருக்கான சாரணீயத்தை இவர் ஆரம்பித்தார்.

இங்கிலாந்து கால்வாயில் ‘பிரவுன்ஸ்’ தீவிலே இருபது சாரணர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சாரணீயம் 1929இல் இருபது இலட்சத்துக்கும் மேலான சாரணர்களுடன் உலகெங்கும் வியாபித்துள்ளமை கண்ட ‘5ஆம் ஜோர்ஜ் மன்னன்’ சாரணீயத் தந்தை பேடன் பவலுக்கு பிரபு பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

**இ.தில்லைவாசன்**
**ஜனாதிபதி சாரணன்**

---

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும்; அரசு-விடுதலைப்புலிகளிடையே நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கைகளோடே அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை மேசையில் இணைவதாக அமைச்சர் டீ.பி.எக்கநாயக்க தெரிவித்தார்.

சமாதான நடைமுறையின் பல்வேறு அணுகுமுறைகள் குறித்து, அரசு தரப்புத் தூதுக்குழுவுக்கு சிறப்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளதென அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் கௌரவமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடனும், தூர நோக்குடனும் நடந்துகொள்ளும் ஜனாதிபதியின் முயற்சிகளை வரவேற்கின்றேன்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான விடயங்களில் அரசாங்கம் வெளிப்படையாக நடந்துகொள்கிறது. எனவே ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடியும் என நம்புகின்றேன் என்றார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் அங்கத்தவர் நிசாந்த ஸ்ரீவர்னசிங்க கருத்து தெரிவிக்கையில், பேச்சுவார்த்தைகள் பயனளிக்க வேண்டுமானால் இரு தரப்புகளும் சமமான அர்ப்பணிப்பைக் காட்டுவது அவசியம் என்றார்.

போர்நிறுத்த உடன்படிக்கையை அர்த்தமுள்ளதாக மாற்ற ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் முக்கியமானவை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

---

**பின்னால் வந்த பேருந்துக்கு**

# வழிவிட மறுத்த மினிபஸ் சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(துன்னாலை)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றுக்கு வழிவிட மறுத்த தனியார் மினிபஸ் சாரதி ஒருவரை கைதுசெய்த நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

குறித்த சாரதிக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுக்கள் பதியப்பட்டிருந்தன.

அவற்றில் ஒன்றான இவ்வருட வருமான வரிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாத குற்றத்தையும், பின்னால் வந்துகொண்டிருந்த பேருந்தைச் செல்லவிடாது வழிமறித்து ஓடிய குற்றத்தையும் விசாரணை செய்த நீதிபதி க.அரியநாயகம் குறித்த முதல் குற்றத்திற்காக ஆயிரம் ரூபா அபராதமும் இரண்டாவது குற்றத்திற்காக 5 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார். (க-101)

---

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரிவர்த்தக மாணவர் சங்கம் ‘பங்குச் சந்தையும் நடைமுறையும்’ என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை இன்று கல்லூரியில் நடாத்தவுள்ளது.

இதில் பிரபல பங்குத் தரகரும், முதலீட்டு ஊக்குவிப்பாளருமான எஸ்.வசந்தகுமார் கருத்துரை வழங்கவுள்ளார். (க-7)

---

# புதிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதியில் புதிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஒன்று கடந்த 18ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சிவபாதத்தினால் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தாய் சேய் நலன் வைத்திய அதிகாரி டாக்டர் சொல்மனும் கலந்துகொண்டார்.

இதுவரை காலமும் மீசாலை ஐயா கடையடியில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அலுவலகத்தினால் சகல கிளினிக்குகளும் இடம்பெற்று வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-108)

# மின்பிறப்பாக்கி

(துன்னாலை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு புதிய மின்பிறப்பாக்கி ஒன்றினை சுகாதார திணைக்களம் வழங்கியுள்ளதாக வைத்தியசாலையின் இயந்திர மேற்பார்வையாளர் கே.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

இவ்வியந்திரம் கிடைத்ததினால் மின்சாரம் தடைப்படும் வேளை வைத்தியசாலை முழுவதற்கும் மின்சாரத்தை வழங்கக் கூடியதாக இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (க-101)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

57 மீள்பார்வை



கண்களில் நடிப்பு

ஒரு சில படங்களில் டென்னிஸ் ஆட்டக்காரனாகவும் ஃபுட்டபால் ப்ளேயராகவும் நடித்ததாகவும் ஞாபகம். ஒரு படத்தில் விளையாட்டு வீரனாக நடிக்க வேண்டுமென்றால் அதை எப்படி விளையாடுகிறார்கள் என்பதை ஓரளவு தெரிந்து கொண்டு அதன்பின்பு விளையாடுவது போல் நடிக்க வேண்டும்.

ஒரு முறை நிதி திரட்டுவதற்காக சென்னையில் நடிகர் நடிகைய ரெல்லாம் சேர்ந்து ஒரு ஸ்டார் கிரிக்கெட் மேட்ச் நடத்தினார்கள் அதில் நான் ஜெமினி கணேசன் , சாவித்திரி , நம்பியார் போன்ற பல பெரிய நடிகர்கள் நடிகைகள் கலந்து கொண் டோம்.

இவை தவிர ஒரு புதுமையான விளையாட்டில் எனக்கு ஆர்வமும் திறமையும் உண்டு. நான் ஒரு பயிற்சிப் பெற்ற வேட்டைக்காரன் கோயம்புத்தூர் பக்கத்தில் உள்ள வேட்டைக்காரன் புதூர் என்னும் ஊரில் என்னுடைய நெருங்கிய நண்பர் முத்து மாணிக்கம் என்பவர் இருக்கிறார். சேலத்தில் செல்லமுத்து என்றொரு நண்பரும் இருந்தார். நாங்கள் எல்லோரும் துப்பாக்கியால் குறி பார்த்துச் சுடும் பயிற்சி பெற்றவர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடும் நுட்பங்களை அறிந்தவர்கள்.

அந்தக் காலத்தில் அரசாங்கத்தில் லைசன்ஸ் பெற்றவர்கள் மட்டுமே காட்டில் சென்று வேட்டையா' முடியும். நான் வேட்டையாடி பல தடவை புலிகளையும் வேறு சில கொடிய மிருகங்களையும் கொன்றிருக்கிறேன்.

அந்தக் காலத்தில் கொடிய மிருகங்களிடமிருந்து மனித இனத்தைச் காப்பாற்ற வேண்டியிருந்தது. அதனால் மிருகங்களை வேட்டையாடினோம். இப்போது மனிதர்களிடமிருந்து மிருகங்களை காப்பாற்ற வேண்டிய நிலை வந்து விட்டது. எனவே வேட்டையாடு வதை நிறுத்திவிட்டேன்.



மேல் மருவத்தூர் ஆதி பராசக்தி பீட சித்தர் ஸ்ரீ ஸ்ரீ பங்காரு அடிகளாருடன்....

### ஓவர் ஆக்டிங்கா...?

டி.எஸ்.என்:. நடிப்பு என்றால் சிவாஜி என்பது எல்லோரும் ஒத்துக்கொண்ட விஷயம்தான் . ஆனாலும் சிவாஜி கணேசன் கொஞ்சம் ஓவராகத் தான் நடிப்பார் காட்சிகளில் அவர் சத்தத்தை கொஞ்சம் குறைத்துப் பேசியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்றெல்லாம் அந்தக் காலத்தில் பத்திரிகையில் சிலர் விமர்சனம் எழுதினார்கள் நீங்கள் பொதுவாக அதற்கு எந்தப் பதிலும் கொடுக்கவில்லை. இந்த விமர்சனத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சிவாஜி: தெரியாமல் ஒரு சிலர் அப்படிச் சொல்கிறார்கள் படித்தவன் பாட்டைக் கெடுத்தான் எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான். என்பதைப் போல் ஒரு சிலர் எழுதினார்கள். இதற்கெல்லாம் பதில் கூற முடியுமா? டிக்ஷ்னரியை (Dictionary) எடுத்துப் பாருங்கள் Acting என்ற வார்த்தைக்கு Exaggeration of expression என்றும் ஒரு பொருள் போட்டிருப்பார்கள் An actor is a dramatic performer என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நடிப்பே ஒரு தோரணைதானே நேச்சுரலாக (Natural ) அல்லது அன்நேச்சுரலாக (Un natural நடிக்கிறான் என்கிறார்கள். அதெப்படிங்க நேச்சுரலாக நடிக்க முடியும் முகத்தில் அரிதாரம் பூசினாலே அன்நேச்சுரல்தானே கட்டபொம்மனை எடுத்துக் கொள்ளுங்கள் கட்ட பொம்மன் ஜாக்சன் துரையிடம் சொல்கிறார்.

கிஸ்தி ,வரி , வட்டி, ஹா... ஹா வானம் பொழிகிறது. பூமி விளைகிறது. உனக்கேன் கொடுப்பது கிஸ்தி எங்களுடன் வ்யலுக்கு வந்தாயா? ஏற்றம் இறைத்தாயா? நாற்று நட்டாயா? களை பறித்தாயா? அங்கே கொஞ்சி விளையாடும் எம் குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துப் பணிபுரிந்தாயா?

என்று தோரணையோடு பேசினால் தானே அது வசனம் அதுதானே நாடகம் .அப்போது தானே மக்கள் எழுந்து உட் காருவார்கள் ரசித்துக் கை தட்டுவார்கள். அதை விட்டுவிட்டு.

ஜாக்சன் துரை அவர்களே... உங்களுக்கு ஏங்க கொடுக்கணும் கிஸ்தி? எங்களோடு வயலுக்கு வந்தீங்களா? ஏத்தம் இறைச்சிங்களா? மஞ்சள் அரைச்சீங்களா? என்று கீழ் ஸ்தாயியில் இழுத்து இழுத்துப் பேசினால் எப்படி இருக்கும்.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே... உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே...

என்று முழங்கினர்ர் அமரகவி பாரதியார்.

இந்த வாக்கியத்தை அழுத்தத்தோடு உரக்கச் சொன்னால்தானே வீரம் வரும் நேச்சுரலாகப் பேசினால் வீரம் வருமா? அச்சம்தான் வரும்.



பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா அவர்களுடன்....

To be or not to be வாழ்வதா சாவதா? என்பது ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஹேம்லட் கேரக்டர் மனதில் எழுந்த கேள்வி. ஹேம்லட் வேடம் போடுகிறவன் நேச்சுரலாக நடிக்கிறேன் என்று சொல்லி இதை மனதுக்குள் சொன்னால் ஜனங்களுக்குத் தெரியுமா? அதனால்தான் நான் ஹேம்ட் வேஷம் போடும் போது To be or not to be என்று அதனை உரக்கச் சொன்னேன். ஜனங்கள் கை தட்டினார்கள் இது தானே நடிப்பு மேலை நாட்டு நடிகர்களும் இதைத்தானே செய்கிறார்கள் ஒத்தெல்லோ நாடகத்தில் Ltis the cause it is the cause என்று ஒத்தெல்லோ தனக்குள்ளேதான் பேசிக்கொள்கிறான் அவ்வாறு பேசினால் ஜனங்களுக்குத் தெரியுமா அதை அழுத்தமாகப் பேசி நடித்துக் காட்டினால் தானே நாடகம் நன்றாக இருக்கும்.

ஓவர் ஆக்டிங் என்ப தெல்லாம் நடிப்பைப் பற்றிச் சரியாகத் தெரியாத ஒரு சிலர் பேசியிருப்பார்கள் ஏனென்றால் ஒருவனை நன்றாக இல்லை யென் றால் தானே இன்னொருவனை நன்றாக இருக்கிறான் என்று சொல்ல முடியும்?

(தொடரும்)

# யாழ். விஞ்ஞான சங்கம் நடத்தும் பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தினால் நடாத்தப்படும் பேச்சுப் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களுக்கான போட்டிகள் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்திலும், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கான போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் மன்னார் மாவட்ட மாணவர்களுக்கான போட்டிகள் புனித சவேரியர் பெண்கள் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 4 மாவட்டங்களில் இருந்தும் 40க்கும் அதிகமான மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பற்றவுள்ளனர்.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத மாணவீர்களும் இப் பரீட்சைக்குப் புதிதாக தோற்ற விரும்பும் மாணவர்களும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் தத்தமக்குரிய பரீட்சை நிலையங்களுக்கு முன் கூட் டியே சமூகமளிப்பின் இப்போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்பளிக் கப்படும் . யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத் தின் பாடசாலை நிகழ்ச்சிக்குழுச்செயலாளர் ஸ்ரீ.அருளானந்தம் தெரிவித்துள்ளார். (க)

# பிறப்புச்சான்றிதழ் விநியோகத்தில் கணனி தகவல் வலைப்பின்னல்

பிறப்புச் சான்றிதழ்களை விநியோகிக்கும் நடை முறையை வினைத்திறன் மிக்கதாக மாற்றும் நோக்கத்துடன் கணனி தகவல் வலைப்பின்னல் ஏற்படுத்தப்படவிருக்கிறது. இந்த முயற்சிகளுக்கு பிலான் இன்ரநஷ னல் என்ற சர்வதேச நிறுவனம் இரண்டு கோடி ரூபாவை நன்கொடையாக கொடுத்துள்ளதென பதிவாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வலைப்பின்னல் உருவாக்கப்படும் பட்சத்தில் வீண் தாமதங்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என்று பதிவாளர் நாயகம் எல்.கே. ரத்தனசிறி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் பிறப்புச் சான்றிதழ்களும் இறப்புச் சான்றிதழ்களும் கையெழுத்துப் பிரதிகளாகவே விநியோகிக்கப்பட்டன. இந்த நடைமுறையை மாற்றியமைத்து 1864ஆம் ஆண்டு தொடக்கம் விநியோகிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களைப் பேணி பாதுகாப்பது திணைக்களத்தின் நோக்கமாகும்.

இது தொடர்பான திட்டம் ஏப்ரல்மாதம் தொடக்கம் நாடு முழுவதும் அமுல் செய்யப்படும். அதனுடன் இணைந்ததாக பிறப்புச் சான்றிதழ்கள் பதிவுசெய்வது பற்றிய முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். பிறப்புச் சான்றிதழுக்கான தகவல் வலைப்பின்னலை ஸ்தா பித்த பின்னர் காணி உறுதிச் சான்றிதழ்களை விநியோகிப்பதற்கான வலைப்பின்னலை ஆரம்பிக்கவும் அரசாங்கம் எண்ணியுள்ளது. (து-7)

# தேடுதல் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

விசா இன்றி நாட்டில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களை கைது செய்யும் விசேட தேடுதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்க குடிவரவு-குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்னர் விசா இல்லாத வெளிநாட்டவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்தப்படுவர் என்று குடிவரவு -குடியகல்வுத்திணைக்கள கட்டுப் பாட்டாளர் பீ.பி.அபயக்கோன் தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்கள் வாயிலாக அடுத்த வாரம் முதல் அறிவிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விசா இன்றி சுமார் ஆயிரம் வெளிநாட்டவர்கள் இலங்கையில் தங்கியிருக்கக்கூடும் என்று தாம் கருதுவதாகவும் மேலும் தெரிவித்தார். (து-7)

# சம்பள அதிகரிப்பு சுற்றறிக்கை அரசினால் இரத்துச் செய்யப்பட்டமை நியாயமற்றது

சில தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் காரணமாக சம்பள அதிகரிப்பு சம்பந்தமான சுற்றறிக்கை இரத்து செய்யப்பட்டமை நியாயமற்ற செயல் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

தேர்தலின் போது வழங்கப்பட்ட உறுதி மொழிக்கமைவாக அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டது. ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கங்கள் மற்றும் ஜே.வி.பியின் தொழிற்சங்கங்களின் வழி நடத்தலில் இந்தச் சுற்றறிக்கை இரத்துச் செய்யப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

அரசாங்க தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் ஜே.வி.பியின் தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் உதவிகள் கிடைக்கின்றன. அவர்கள் பதவிகளில் இருக்கிறார்கள். இதனால் ஒன்றும் அறியாத அப்பாவி அரச ஊழியர்கள் பாதிக் கப் படுகின்றனர். எனவே எந்த ளவு ஊதிய அதிகரிப்பை வழங்கமுடியுமோ அதனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்திருப்பதால் அதனை ஈடுசெய்ய மேலதிகப் பணம்தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (கு-7)



அண்மையில் நடைபெற்ற கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தின் மெய்வல்லுநர் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு கிளிநொச்சி வலய கல்விப்பணிமனை கணக்காளர் பரிசில்களை வழங்குவதையும் அவருக்கு அருகில் பாடசாலை அதிபர் க.இராசேந்திரம் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: மந்துவில் செய்தியாளர்)

# கல்விப் பின்னடைவுகளைச் சீர் செய்யும் "மெல்லக் கற்கும் மாணவர் திட்டம்"

(தென்மராட்சி)

'ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் திட்டமிடும் ஒவ்வொரு கட்டத்திலும் பிள்ளைகளை முழுமையாகப் பங்களிக்கச் செய்யவேண்டும். இதற்கு கவனமான ஆயத்தங்கள் செய்ய வேண்டும். பாடசாலைகளில் பிள்ளைகள் இயல்பாக இருக்கத் தக்கதாக பிள்ளைச் சிநேக சூழல் உருவாக்கப்படல் வேண்டும்.'

இவ்வாறு காமன் வெல்த் கல்வி நிதியத்தின் மாகாண இணைப்பாளரான வீ.ஸ்ரீசக்திவேல் கடந்த திங்களன்று அற வழிப் போராட்டக்குழுவின் பணி மனையில் நடைபெற்ற மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான செயல்திட்டத்தின் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், உதவிக்கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா, க.தம்பி முத்து மற்றும் கா.செல்வஜோதி ஆகியோரும் பங்குகொண்டிருந்தனர்.

மாகாண இணைப்பாளர் வீ.ஸ்ரீசக்திவேல் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

'இலங்கையில் வசிக்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் கட்டாயமாகக் கல்வி வழங்குவதும் அதன் பின்பு ஒவ்வொரு பிரஜையும் பூரண வாழ்க்கை நடாத்துவதற்கான வசதிகளை வழங்குதலும் தேசியக் கொள்கையாக அரசியல் யாப்பின் மூலம் உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தான் உறுப்புரிமை 28 உறுதிப்படுத்தியுள்ளது. இனம், சமயம், பால், உடல், உள குறைபாடு, சமூகக்குழு அல்லது வேறு ஏதாவது அடிப்படையிலேனும் பாரபட்சம் காட்டப்படலாகாது. ஆனால் இன்று இந்த நாட்டில் இடம்பெறுவது என்ன?

ஆரம்பக்கல்வியில் பிள்ளைகளை ஈடுபடச் செய்வதிலுள்ள நெறிமுறைகளைப் பற்றியும் நன்கு கவனமெடுக்க வேண்டும். பிள்ளைகள் விளங்கிக்கொள்ளாத நிலை ஏற்படின் அவர்கள் இலகுவில் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் அன்பாகவும் எளிமையாகவும் கூறவேண்டும். எக்காரணம் கொண்டும் பிள்ளைகளிடம் ஆத்திரப்படவோ அல்லது கண்டிக்கவோ கூடாது.

பாடசாலைகளை மேம்படுத்துவதற்குப் பெரிதும் தேவைப்படுவது பயிற்சி என்றே ஆசிரியர்கள் கூறுவார்கள். ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியானது பயனுள்ளதாக அமைந்துள்ளது என்ற கணிப்பு பிள்ளைகள் அடைகின்ற அடைவில் இருந்துதான் கணிக்கப்படும்' என்றார்.

தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அங்கு உரையாற்றும்போது,

காமன் வெல்த் கல்வி நிதியத்தின் அனுசரணையுடன் அமுல் செய்யப்படும் மெல்லக்கற்கும் மாணவர்களின் திட்டத்தின் மூலம் கடந்த காலங்களில் இடம்பெற்ற கல்விப் பின்னடைவுகளைச் சீர் செய்யமுடியும்.

பாடசாலைகளில் மெல்லக் கற்கும் மாணவர்கள் குறித்த பிரச்சினைகளை நாம் பெரிது படுத்திப் பேசிக்கொள்வதால், அதற்கான தீர்வு கிட்டிவிடப் போவதில்லை. மாறாக மெல்லக் கற்கும் மாணவர்களின் கல்வி நிலையை எப்படி மேம்படுத்தலாம் எனச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

அத்துடன், இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் தமது பொறுப்புகளையும் கடமைகளையும் உணர்ந்து எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவ வேண்டும்.

இத்தகைய மாணவர்களின் உயர்ச்சியும் வளர்ச்சியும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களிடமே உள்ளது. எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உதவிக்கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா, மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் மு.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர். (க-16)

## யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இன்றுடன் நான்கு ஆண்டுகள் பூர்த்தி

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டு இன்றுடன் நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வைக் காணும் நோக்கத்துடன் கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

அரசாங்கத்தின் சார்பில் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் தலைவர் பிரபாகரனும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டு முதல் ஒரு வருட காலத்துக்கு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும் தொடர்ந்து வந்த 3 ஆண்டுகளில் பேச்சுவார்த்தை முற்றாகத் தடைப்பட்டிருந்தன.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்ற அதே தினத்தில் ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின்றது.

சுமார் 3 வருட இடைவெளிக்குப்பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு இரண்டு தரப்பினரும் இணக்கம் தெரிவித்திருப்பது மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் இன்று ஆரம்பமாகும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் வெற்றிபெற வேண்டுமென வேண்டியும் நாடளாவிய ரீதியில் பல்வேறு பிரார்த்தனை வைபவங்களும் தீப ஆராதனை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நாட்டின் பல இடங்களிலும் ஆலயங்களில் சர்வமத ஆராதனைகளும் விசேட பூசை வழிபாடுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (து)


## சட்டரீதியான நடவடிக்கை


(கொழும்பு)

அரசியல் அமைப்புச்சபையை நிறுவுவதற்கு மேலும் தாமதமாகுமானால், அதற்கெதிரான சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப் போவதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


அரசியல் அமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிக்க, அரசியல் கட்சிகள் முயற்சி எடுக்காததால் சுயாதீன ஆணைக் குழுக்கள் அனைத்தினது நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன.

இதன் காரணமாக ஜனாதிபதி துரிதமாகத் தலையிட்டு, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பேசில் பெர்னாண்டோ தெரிவித்தார். (த-7)












சமாதானப் பேச்சுவார்த்தைகளின் வெற்றிக்காக யாழ்.மாவட்ட மனிதநேய ஒன்றியத்தின் அனுசரணையுடன் நேற்று பி.ப.2 மணியளவில் யாழ்.வணிகர்கழக மண்டபத்தில் நடைபெற்ற சர்வமதப் பிரார்த்தனையில் சர்வமத குருமார்கள் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி உரையாற்றுதையும், அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு மதகுருமாரும் விசேட பிரார்த்தனையிலும் மௌனப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டுள்ளதையும், வணிகர் கழக தலைவர் இ.ஜனக்குமார் நன்றி நவில்வதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பொது மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- திலீவின்பன்)

அமைதிக்கு உழைப்பதே உலகிற்கு நாம் செய்யும் கடமையாகும். சமாதான முழக்கங்களை வெறுமனே கூறிக்கொண்டிராமல் அமைதிக்காக தீவிரமாகப் பாடுபட்டால்தான் வருங்கால உலகம் பாதுகாக்கப்படும். -டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# இழப்பு மேடையில் ஏறி நிற்கும் பேச்சு

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் இன்று ஜெனீவாவில் ஆரம்பமாகின்றது.

இன்றும் நாளையும் இடம்பெறும் பேச்சுக்கள் ஒரு நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கப் போகின்றது.

கடந்த இருபது வருட கால யுத்தத்தின் இழப்புக்கள் தந்த துயர மேடை மிகவும் உயரமானது.

இந்த உண்மையை சர்வதேச சமூகம் தற்போது நன்கு உணர்ந்துள்ளது. சிறிய நாடான இலங்கையில் இத்துணை தூரம் இனப்பாகுபாடு விரிவதற்கும் மனித உயிர்கள் அவலமாகப் பறிக்கப்படுவதற்கும் காரணம்தான் என்ன? என்பதை ஆராயும் அதேவேளை இலங்கையில் இனயுத்தம் வியாபகம் பெறுவதற்குத் தாமும் காரணமாகவிருந்துள்ளதை சர்வதேச நாடுகள் உணர்ந்துள்ளன.

குறிப்பாக இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய பிரிட்டன் சுதந்திரப் பொதியை சிங்களத் தலைமைகளின் கையில் திணித்துவிட்டு கறுவாப்பட்டையோடு கப்பல் ஏறியது முதல், இலங்கை அரசுகள் காலாகாலமாக தமிழ் மக்களை அடக்குவதற்கு ஆயுதம் வழங்கியது வரையான செயற்பாடுகள் சர்வதேச நாடுகளை உறுத்துவதாகவுள்ளது.

இந்நிலையிலேயே நோர்வேயின் அனுசரணையுடன் ஜெனீவாவில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இன்று பேச்சுக்கள் நடைபெறுகின்றது.

நடைபெறும் பேச்சுக்கள் சுவிஸ்லாந்தின் தலைநகரில் அழகிய அரண்மனையில் அற்புதமான நாற்காலி இருப்புகளோடு இடம்பெற்றாலும், பேச்சுக்கான பாதையை திரும் பிப் பார்க்கின்றபோதுஅங்கே தெரிகின்ற மேடுகள் மனித உடல்களைபுதைத்த புதைகுழிகளாகவும் பள்ளங்கள் தமிழ் மக்களின் வாழ்விடங்களை அழித்த அடையாளங்களாகவுமே இனங்காணப்படும்.

இருபது வருடமாக இடம் பெற்ற யுத்தத்தை முடிபுகாண்பதற்கு இரண்டு நாட்கள் போதவே போதாதென்பது தெரிந்தவிடயம்.

ஆனால், இனிமேல் நாம் யுத்தம் செய்வதில்லை. மானிடத்தின் மகத்தான உயிர் அழிவை அனுமதிப்பதில்லை என்ற தீர்மானத்தை-உறுதிமொழியை எடுப்பதற்கு இரண்டு நாட்கள் அல்ல; இரண்டு நிமிடங்களே போதுமானவை.

ஆம், இன்று ஜெனீவாவில் நடைபெறும் பேச்சுக்களை இலங்கை வாழ் அப்பாவி மானிடங்கள் உன்னிப்பாக நோக்குகின்றன ஏன் தெரியுமா? இந்த மண்ணில் நிம்மதியாக வாழ்வதற்கு வழி கிடைக்குமா என்ற முடிபுக்காக. சர்வதேசமே கேட்கின்றதா! ஈழத் தமிழர்களின் இதய ஒலிப்பு.

## காணாமல் போனவர்கள் குறித்து

# வீடு வீடாகச்சென்று தகவல்களை திரட்டும் மனித உரிமைகள் ஆணைக்குழு

இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களின் உறவினர்களின் வாக்கு மூலங்களை வீடு வீடாகச் சென்று மனித உரிமைகள் ஆணைக்குழு திரட்டி வருவதாக ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப் பதிகாரி றோகித பிரியதர்ஷன தெரிவித்தார்.

காணாமல் போனோர் சம்பந்தமான பார்வையிடும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் காணாமல் போனோர் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பதிகாரி தலைமையிலான குழுவும் விசாரணை அதிகாரி ரி.சுரேந்திரராஜா தலைமையிலான குழுவும் நேற்று முன்தினம் முதல் தமது விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

காணாமல் போனோர் தொடர் பாக இரண்டு மாதங்களில் 61 பேருடைய முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும், இது தொடர் பான விசாரணைகளையே ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மேற்கொண்டு வருவதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி தெரிவித்தார். அத்துடன் ஒரு வாரத்திற்குள் விசாரணைகளை மேற் கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-133,2)

# சிறிலங்கா காவல்துறையைச் சேர்ந்தவருக்கு மார்ச் 27 திகதி வரை விளக்கமறியல் நீடிப்பு

(கிளிநொச்சி)

சிறிலங்கா காவல்துறையைச் சேர்ந்த ப.பொவிகொடவினைச் மார்ச் 27ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 9ஆம் திகதி மன்னாரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்தார்கள் என கைது செய்யப்பட்ட மூன்று சிறிலங்கா காவல் துறையினர் மீது கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரனுக்கும் நோர்வேயின் அபிவிருத்திய மைச்சரும் சிறப்புத் தூதுவருமான எரிக்சொல்ஹெய்மிற்குமிடையில் நடைபெற்ற சந்திப்பையடுத்து பிரபாகரன் பணிப்பின் பேரில் குளியாப்பிட்டியைச் சேர்ந்த கே.எ. டொன்சரத் (வயது-39) என்ற சிறிலங்கா காவல்துறை உறுப்பினர் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 18ஆம்திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பணிப்புக்கமைய நுகேகொட வரகாப்பொலயைச் சேர்ந்த சிறிகேமந் (வயது-30) என்ற சிறிலங்கா காவல்துறை உறுப்பினரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று விடுதலை செய்தது.

இருவர் விடுவிக்கப்பட்டநிலையில் ஒருவர் மீதான விசாரணை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசாரணையின் இறுதியில் ப.பொவிகொடவினை மார்ச் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (04)

## பேச்சுவார்த்தைக் குழுக்களின்

# தங்குமிடங்கள் பாதுகாப்பு வசதி அந்தரங்கமாகவுள்ளனவாம்

அரசாங்கத்துக்கும் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத் துக்குமிடையே ஜெனீவாவில் இன்றும் நாளை யும் நடைபெறவிருக்கும்பேச்சுவார்த்தைக்கான சகல ஏற்பாடு களையும் சுவிஸ்லாந்து அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இரு தரப்புக் குழுவினரின் பாதுகாப்பு மற்றும் தங்குமிட ஒழுங்குகள் அனைத்தும் கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுவிஸ்லாந்தின் வெளிவிவகார அமைச்சுப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மற்றும் அரசாங்க அமைச்சர்கள் அடங்கிய குழுவினரின் பாதுகாப்பை யார் கவனிக்கிறார்கள் என ஊடகவியலாளர்கள் கேட்டபோது அதனை எமது நாட்டுக்குப் பொலிஸார் மட்டுமே கையாளுகின்றார் எனத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக முன் கூட்டியே ஜெனீவாசென்றடைந்தவர்கள் விடுதலைப்புலிகளேயாவர். அவர்களின் தங்குமிடங்கள், பாதுகாப்பு மற்றும் உதவியாளர் தங்குமிடங்கள், போக்குவரத்து ஒழுங்குகள் அனைத்துமே மிகவும் அந்தரங்கமாகவே வைக்கப்பட்டுள்ளன.

இன்று ஆரம்பமாகும் இந்தப் பேச்சுவார்த்தை ஜெனீவா நகரிலுள்ள சட்டு டி பூ ஸி என்ற இடத்தில் அமைந்துள்ள அரண்மனையிலேயே நடைபெறுகின்றது.

மிகவும் பழைமைவாய்ந்த அரண்மனைஇது. உலக தேவாலய சபையின் கற்கை நிலையமாகவும் சர்வதேச மாநாட்டு மண்டமுமாகவும் இந்த அரண்மனை செயற்பட்டு வருகின்றது.

இந்த அரண்மனையில் உள்ள அறைகளில் 40 அறைகள் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளும் குழுவினர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பழைமை வாய்ந்த அரண்மனையாக இருந்த போதிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கதவுகள் மற்றும் தேவையான வசதிகள் எல்லாம் செய்யப்பட்டுள்ளன.

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகள் அமைப்புக்குமிடையே இன்றும் நாளையும் நடைபெறவிருப்பது இரு தரப்பும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை முறை யாகக் கடைப்பிடிப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தையேயாகும். (து)

# தொலை நோக்குக் கல்வி திட்டம் விரைவில் அறிமுகம்

தொலைநோக்கு கல்வித் திட்டத்தை விரைவில் அறிமுகம் செய்வது குறித்து, கல்வியமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், பாட சாலை ஒன்றில் இடம்பெறும் கல்வி நடவடிக்கைகள் நவீன தொழில்நுட்ப சாதனங்களூடாக பல பாடசாலைகளுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதத்தின் நடுப் பகுதியில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதன் முதல்கட்டமாககொழும்புறோயல் கல்லூரி, மாத்தறை புனித சேவியர் கல்லூரி, திருக்கோவில் தேசிய பாடசாலை ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இந் தக் கல்வி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் மூலம் கொழும்பிலுள்ள திறமை மிக்க ஆசிரியர்களின் போதனைகளை தூர பிரதேசமாணவர்களுக்கு பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கிட்டுமென்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (க-7)

# பறவைக்காய்ச்சல் அபாயம்! விழிப்பாக இருக்குமாறு அறிவுறுத்து

உலகின் பல நாடுகளிலும் பரவி வரும் பறவைக் காய்ச்சல் நோய் இலங்கையிலும் பரவ வாய்ப்பிருப்பதால் மக்கள் இது விடயத்தில் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும் என யாழ்ப்பாணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உலகின் பல நாடுகளில் பரவி வரும் பறவைக் காய்ச்சல் தற்போது இந்தியாவிலும் பரவியிருப்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்நோய் தீவிரமாக பரவியுள்ள தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து தேசம் விட்டு தேசம் செல்லும் பறவைகள் எமது மாவட்டத்திற்கும் வருகை தருவதால் இந் நோய் எமது மாவட்டத்திற்கும் பரவ வாய்ப்புண்டு.

எனவே பொதுமக்கள் இது சம்பந்தமாக விழிப்புணர்வுடன் இருக்குமாறு வேண்டுகிறோம்.

குறிப்பாக கோழிப்பண்ணை உரிமையாளர்கள் தங்கள் பண்ணைகளில் கோழிகள் ஏதும் இறந்தால், அதனை அப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரிக்கும் கால்நடை வைத்திய அதிகாரிக்கும் உடனடியாக அறிவிக்கும்படி வேண்டுகிறோம் என்றுள்ளது. (க)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



மற்றவர்கள் மீது அன்பு செலுத்துவது நம்முடைய நல்ல பண்பை வளமடையச் செய்யும். நம்மையும் முழுமனிதனாக வாழ வைக்கும். நம்மிடமுள்ள கோபம், பொறாமை, அற்பத்தனம் ஆகியவற்றை அடியோடு விரட்டியடிக்கும். அன்பு வாழ்க்கைப் பாலைவனமாக்காது மாறாக பூஞ்சோலை ஆக்கும்.

சுவாமி விவேகானந்தர்





அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற வேண்டி யாழ்.வணிகர் கழகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வமதப் பிரார்த்தனையின் போது...

படங்கள்:-திலீப்

# அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைய இராணுவம்முயற்சி

## கஜேந்திரன் எம்.பி. முறையீடு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்தியில் உள்ள தனது அலுவலகத்திற்குள் நேற்றுப் பிற்பகல் இராணுவத்தினர் அத்துமீறி நுழைய முற்பட்டதாக தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர் செய்த முறைப்பாட்டில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் தனது அலுவலகத்திற்குள் இராணுவத்தினர் அத்துமீறி நுழைய முற்பட்டதாகவும் அவ்வாறு நுழைய முற்பட்ட இராணுவத்தினரை பொலிஸார் இல்லாமல் அனுமதிக்க முடியாது எனத்தான் கூறியதாகவும் இதன்போது இராணுவத்தினர் தன்னை மிரட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந)

# தாவடியில் திருட முயன்ற இருவரை விழிப்புக்குழு மடக்கிப் பிடித்தது

## திருடர்களிடம் பிஸ்ரலும் இருந்ததாம்

தாவடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் திருடமுயன்ற மூன்று திருடர்களில் இருவர் விழிப்புக் குழுவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். மற்றையவர் தப்பியோடியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பிடிபட்ட திருடர்களிடம் பிஸ்ரல் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

திருடர்கள் பிடிபட்ட தகவல்கள் கிடைத்து சம்பவ இடத்திற்குப் பொலிஸார் சென்ற போதிலும் அவர்களிடம் திருடர்களை ஒப்படைக்க பொதுமக்கள் மறுத்துவிட்டனர்.

இதனையடுத்து கலாசாரத்தைப் பேணும் குழுவினரிடம் திருடர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை பிடிபட்ட திருடர்கள் இருவரும் அண்மையிலேயே யாழ்.பொலிஸ் நிலையத்தில் விளக்கமறியலில் இருந்து பிணையில் வந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, தாவடிப் பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்ளை அடுத்து அப்பகுதி இளைஞர்கள் ஒன்றுகூடி விழிப்புக் குழுவை அமைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-133)

# ரெலோவின் பணிகள் தற்காலிக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 7 வருடங்களாக 657,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்என்னும் முகவரியில் இயங்கி வந்த ரெலோவின் யாழ். மாவட்ட செயலகம் நேற்று முதல் மூடப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்டத்தில் வேறொரு பகுதியில் மாவட்ட தலைமைச் செயலகம் திறக்கப்படும் வரை யாழ். மாவட்டத்தில் தமது அரசியல் பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ரெலோவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந)

# கொக்குவில் இந்துவின் மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கல்லூரியின் அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் அருணாசலம் சிறிகாந்தன் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி சர்வேஸ்வரி சிறிகாந்தன் வழங்குவார்.

(ந)

# தீவக வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(வேலணை)

தீவகக் கல்விவலயத்தில் வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை, கரம்பொன் சண்முகநாதன் ம.வி. ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்படவுள்ளது. இப் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து (அதிபர் சேவையைச் சேர்ந்தோர், ஆசிரியர் சேவை தரம் 2-II ,2-I,1) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தீவக வலயத்தில் கடமையாற்றுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் விண்ணப்பங்களை 10.03.2006 க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தீவகவலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் கேட்டுள்ளார்.

(ந)

# சடலத்தைப் பொறுப்பேற்க!

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து எவருமே உரிமை கோரப்படாத நிலையில் டி- 5, பரந்தனைச் சேர்ந்த எம். இலட்சுமணன் என்பவருடைய சடலம் வைக்கப்பட்டுள்ளதாகவும் சடலத்தை இருவாரத்தினுள் உறவினர்களால் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ந)

# எங்களிடம் பிரபா சிந்தனை...

கொண்டு வருகின்றனர்.

நாங்களும் இரண்டு நாட்களுக்கு அவர்களுக்கு வகுப்புக்களை. வைத்துவிட்டு விடுவோம். வேறு என்ன செய்வது? போர் நிறுத்தத்தை செம்மையான முறையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மட்டுமே நாம் நிச்சயம் பேசுவோம்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்களாவன.

- துணை இராணுவக்குழுக்களை நிராயுதபாணிகளாக்குதல்.
- உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான மக்களை தமது சொந்த நிலங்களுக்கும் வீடுகளுக்கும் செல்லவிடாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதனை அகற்றி மக்கள் தங்கள்சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல வேண்டும்.
- மீன்பிடித் தடைகளினால் தமிழ் மீனவர் சமுதாயம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய மீன்பிடித்தடைகளை நீக்கி தமிழ் மக்கள் தமிழீழக் கடலில் சுதந்திரமாக மீன் பிடிக்க வழியேற்படுத்திக் கொடுத்தல்.
- சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள எங்களின் சொந்த மண்ணில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் போராளிகள் மக்களுடன் இணைந்து அரசியல் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவற்றை நிறைவேற்ற இப்பேச்சுக்களில் வலியுறுத்துவோம். இப் பேச்சுக்கள் வெற்றி பெறுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் பயிற்சி பெற்று சிங்கள அரசியல்வாதிகள் குழு இங்கே வருகின்றது. நாங்களும் பிரபாகரன் சிந்தனை என்ற அடிப்படையில் போகின்றோம். எந்த சிந்தனை எடுபடப்போகிறது என்பதைப் பார்ப்போம்.

எங்கள் மக்களின் உரிமைக ளை வென்றெடுக்கத்தான் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கின்றோமே தவிர வேறு நோக்கம் எதுவும் எங்களுக்கு இல்லை எனவும் அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

(ந)

# ஜெனீவாவில் இன்று...

சந்திப்பிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சுவிஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இப் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகளின் தரப்பில் தலைமை பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான குழுவினரும் அரச தரப்பில் அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தலை மையிலான அரச தரப்புக்குழுவினரும் நேற்றுக்காலை அரண்மனை விருந்தினர் மாளிகைக்கு பிரசன்னமாகியிருந்தனர்.

பேச்சுவார்த்தைக்கு முன்னர் இரு தரப்பும் வெளியிட்டுள்ள கருத்துக்களின்படி அரச தரப்பில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் செய்யப்படவேண்டுமென அறிவுறுத்தப்படு,கின்றது.

ஆனால், விடுதலைப்புலிகளின் தரப்பில் பாலசிங்கத்தினை மேற்கோள்காட்டி யுத்த நிறுத்த உடன்படிக்கையில் எவ்விதமான மாற்ற ங்களும் செய்யப்பட மாட்டாது எனவும் அதனை அமுல் படுத்துவதில் உள்ள சிக்கல்கள் மட்டுமே விவாதிக்கப்படுமெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை அரண்மனை மாளிகையில் தங்கியிருக்கும் இரு தரப்பினரும் உத்தியோகப்பற்றற்ற முறையில் சந்தித்துக் கலந்துரையாடியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ந-4)

# பேச்சுக்கள்...

இந் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தரபரமாச்சரிய சுவாமிகள், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ,பேராயர் ஜெபநேசன், மௌலவி அலாவுதீன் ஆகியோருடன் சர்வமதக் குருமார்கள் , வணிகர்கள், பொது மக்கள்,மாணவர்கள்எனப் பலரும் கலந்து கொண்டனர். (ந-39,133)

# நோர்வேத்...

கூறப்படுகிறது. இதேவேளை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அரச குழுவினர், நோர்வே சிறப்புத்தூதுவரும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சருமான எரிக் சொல் ஹெய்மைச் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(4)

# மகிந்தவின்...

கொண்டுள்ளதாக கூறினார்.

இதேவேளை இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இப் பேச்சுவார்த்தையில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என பேரியல் அஷ்ரப் தெரிவித்தார்.

(ந-39)








## தொலைபேசி இயக்குநர் தேவை

காரைநகரில் இயங்கும் பிரபல தொலைத் தொடர்பகம் ஒன்றிற்கு தொலைபேசி இயக்குநர் ஒருவர் தேவை. (காரைநகர், மூளாய்ப் பகுதியில் உள்ளவர் விரும்பத்தக்கது). சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

இல.77, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம் .

தொலைபேசி:- 077 3618195


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 22.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.